Registered as a NewsPaper

விலை ரூபா 7.00

# ஈழநாதம்

EELANATHAM

மக்கள் நாளிதழ்

பக்கங்கள் -08

நாதம் 14 | திருவள்ளுவர் ஆண்டு 2034 | கார்த்திகை -04 | 20-11-2003 | வியாழக்கிழமை | ஓசை 275

தட்டச்சு தமிழ் ஆங்கிலம்

பகலவன்

அரச ஊழியர்கள் சம்பளம் 10 வீதம் அதிகரிப்பு

உரத்திற்கான மானியம் 100 கோடியால் உயர்வு

பாதுகாப்புச் செலவீனம் 5208 கோடி ரூபா

வட-கிழக்கு புனரமைப்புக்கு 800 கோடி ஒதுக்கீடு

# 2004ஆம் ஆண்டிற்கான செலவீனம் 46,900 கோடி

# வருமானம் 33,200 கோடி; பற்றாக்குறை 13,700 கோடி

## வரவு-செலவுத் திட்டம் பாராளுமன்றில் சமர்ப்பிப்பு



**பாராளுமன்றத்தில் நேற்று சமர்ப்பிக்கப்பட்ட வரவு-செலவுத் திட்டத்தில் அரச ஊழியர்களுக்கான சம்பளம் மற்றும் ஓய்வூதியர்களுக்கான கொடுப்பனவு 10 வீதத்தால் அதிகரிக்கப்பட்டுள்ளதோடு, உரங்களுக்கான மானியமும் 100 கோடி ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ளது. பாதுகாப்பிற்கென 5208 கோடி ரூபா ஒதுக்கிடு செய்யப்பட்டுள்ள இவ் வரவு-செலவுத் திட்டத்தின் மொத்தச் செலவீடு 46,900 கோடி ரூபாவாகும். எதிர்பார்க்கப்படும் வருமானம் 33,200 கோடி ரூபாவாகும். துண்டுவிழும் தொகை 13,700 கோடி ரூபாவாகும் எனவும் மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.**

2004ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டம் நேற்று பாராளுமன்றத்தில் நிதி அமைச்சர் கே.என். சொக்ஸியினால் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. இதில் அரசாங்க ஊழியர்களின் சம்பளம் மற்றும் ஓய்வூதியக் கொடுப்பனவு அதிகரிக்கப்பட்டுள்ளது. அடுத்த ஆண்டு தொடக்கம் இது அமுல்ப்படுத்தப்படும்.

அரசாங்க ஊழியர்கள் பத்து சதவீதம் அல்லது 1250 ரூபா என்ற

(8 ஆம் பக்கம் பார்க்க)

## அமைச்சர் மிலிந்த மொறகொட இன்று ஜப்பான் பயணம்

(கொழும்பு)

அமைச்சர் மிலிந்த மொறகொட விஜயமொன்றை மேற்கொண்டு இன்று டோக்கியோ செல்கிறார். அவர் தற்போதைய அரசியல் நிலைமை பற்றி எடுத்துக் கூறுவார். நாட்டில் ஏற்பட்டுள்ள அரசியல் நெருக்கடி நிலைமையை ஜப்பான் உன்னிப்பாக அவதானிப்பதாகவும் ஐக்கிய தேசிய முன்னணியும் பொதுசன ஐக்கிய முன்னணியும் சேர்ந்து தேசிய அரசை உருவாக்குவதன் மூலம் பிரச்சினைக்கு தீர்வு காண்பார்களென நம்புவதாகவும்ஜப்பான் தெரிவித்துள்ளது.

## அனுசரணையிலிருந்து நோர்வே விலகியமை அரசியல் சிக்கலைத் தீர்க்கும் தந்திரோபாயமே

### இந்திய வெளியுறவு அமைச்சுச் செயலாளர்

(புதுடில்லி)

இலங்கை சமாதானத் திட்டத்திலிருந்து நோர்வே விலகியிருப்பது இலங்கையின் அரசியல் சிக்கலைத் தீர்ப்பதற்கான தந்திரோபாயம் என இந்திய வெளிநாட்டு அமைச்சின் செயலாளர் கன்சிபால் சிவல் கூறினார்.

அது ஒரு தந்திரோபாய இடைநிறுத்தம். ஆனால், அதைவிட்டு விலகிப்போகவில்லை. பாதுகாப்பு அமைச்சு ரணிலின் கையிலா அல்லது சந்திரிகாவின் கையிலா என ஒஸ்லோ தெரிந்து கொள்ள வேண்டியுள்ளது என ஙிக் சூல் ஹெய்ம் செவ்வாயன்று என்னைச் சந்தித்துக் கூறினார்.

பாதுகாப்பிற்கும் சமாதானத் திற்குமிடையிலான முக்கிய கட்டம்

(8 ஆம் பக்கம் பார்க்க)

# பாராளுமன்றை சனாதிபதி ஒத்திவைத்தது நடைமுறைகளுக்கு முரணானது

### சபாநாயகர் ஜோசப் மைக்கல் பெரேரா சாடல்

(கொழும்பு)

சிறிலங்கா பாராளுமன்றத்தை இரண்டு வாரங்களுக்கு முன்னர் முடக்கிவைத்த சிறிலங்கா சனாதிபதியின் செயல் ஒரு அதிகாரத்துஷ்பிரயோகம்.

அரசாங்கத்தின் ஓர் அங்கத்தை முடக்கி வைக்கும் நோக்கத்துடன் இது செய்யப்பட்டதாக நேற்று பாராளுமன்றம் மீண்டும் கூடியபோது உரையாடிய சபாநாயகர் ஜோசப் மைக்கல் பெரேரா மேலும் கூறுகையில், இதனைத் தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றக் கூட்டத்தொடரை பாதிக்கும் விதத்தில் எதிர்காலத்தில் சனாதிபதி முயற்சிசெய்தால் அதைப புறக்கணித்துவிட்டு பாராளுமன்றம் தன்னைத்தானே அழைத்துக் கொண்டு கூட்டத்தொடரை நடத்தும் என்று அவைத் தலைவர் எச்சரித்தார்.

இதன்போது சனாதிபதிக்கு நாடாளுமன்றத்தை ஒத்திவைப்பதற்கான அனைத்து அதிகாரங்களும் அரசியலமைப்பில் வழங்கப்படவில்லை என

(8 ஆம் பக்கம் பார்க்க)

## சபாநாயகரின் பாராளு. உரைக்கு பொ.ஐ.மு.,ஜே.வி.பி.கடும் ஆட்சேபம்

(கொழும்பு)

சபாநாயகர் நேற்று பாராளுமன்றத்தில் உரையாற்றியதை பொ.ஐ. முன்னணி, ஜே.வி.பி. அங்கத்தவர்கள் ஆட்சேபனை தெரிவித்துள்ளனர்.

நேற்று மீண்டும் பாராளுமன்றம் கூட்டப்பட்டபோது அதில் சபாநாயகர் உரையாற்றும்போது சனாதிபதியால் பாராளுமன்றம் ஒத்திவைக்கப்பட்டது பாராளுமன்ற நடைமுறைகளுக்கு முரணானது எனக் கூறி சனாதிபதியின் செயலை சாடியிருந்தார். இதனையடுத்தே சபாநாயகரின் உரையை பொ.ஐ. முன்னணியினரும், ஜே.வி.பி. னரும் ஆட்சேபித்துள்ளனர்.

இதேவேளை, மகிந்த ராஜ

(8 ஆம் பக்கம் பார்க்க)



## மாவீரர் நினைவு பதாகைகள் அமைப்பதில் வல்வெட்டித்துறையில் மக்கள்-படையினர் முறுகல்

மாவீரர் நினைவு தின பதாகைகள் அமைத்தல் சம்பந்தமான விடயத்தில் வல்வெட்டித்துறைப் பகுதியில் படையினருக்கும் பொதுமக்களுக்குமிடையே ஏற்பட்ட முறுகல் நிலையால் அப்பகுதியில் பெரும் பரபரப்பு நிலவியுள்ளது.

நேற்றைய தினம் நடைபெற்ற இச்சம்பவம் பற்றி தெரியவருவதாவது, வல்வெட்டித்துறை நெடியாளகாட்டுப் பிள்ளையார் ஆலயப் பகுதியில் வைத்து மாவீரர் தின அலங்காரப் பதாகைகளை அமைக்கும் நடவடிக்கையில் அப்பகுதி மக்கள் ஈடுபட்டுக் கொண்டிருந்த வேளை, அங்கு வந்திறங்கிய சுமார் 500இற்கும் மேற்பட்ட கடற்படையினர் மேற்படி பதாகைகள் அமைக்கும் பணியை நிறுத்துமாறு

(8 ஆம் பக்கம் பார்க்க)

## மாவீரர் நாளை உணர்வெழுச்சியுடன் அனுஷ்டிக்க யாழ்.மாவட்ட ஏற்பாட்டுக்குழு அறைகூவல்

கார்த்திகை-27 தமிழ் பேசும் மக்களின் புனிதமான நாளாகும். சர்வதேசம் எங்கும் வாழும் தமிழ் பேசும் மக்களால் நினைவு கூரப்படும் உன்னதமான நாள்.

எமது மண்ணின் விடுதலைக்காக மக்களின் நல்வாழ்வுக்காக தங்களது இளமைகளை, உறவுகளை, பந்தபாசங்களைத் துறந்து தலைவனின் வழியில் வீறு நடைபோட்டு விடுதலை வேள்வியில் ஆகுதியாகிய புனிதர்களை நினைவு கூரும் நன்நாள் மாவீரர் நாளாகும்.

தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் நியாயப்பாட்டை உலக அரங்கில் ஒலிக்கச் செய்பவர்கள் தான் இந்த மாவீரர்கள். உடலில் இறுதிச் சொட்டு இரத்தம் உள்ள வரை தமிழீழ தாயக நினைவுகளை இதயத்தில் தாங்கி பேரினவாத வல்லாதிக்க சக்திகளை எதிர்த்து போர்க் கொடி தூக்கியவர்கள் இந்த மாவீரர்கள்.

(8 ஆம் பக்கம் பார்க்க)

## மாவீரர் நாள் நவம்பர்-27

புயலாக எழுந்த பேராபத்துக்களை எல்லாம் மலையாக நின்று எதிர்கொள்ள, இரும்பை ஒத்த மனவுறுதி எனக்குத் தேவைப்பட்டது. இந்தச் சோதனை மிகுந்த நெருக்கடியான வரலாற்றுக் கட்டங்களில் எனக்குப் பக்கபலமாக - மனித மலைகளாக-உறுதியோடு நின்ற மாவீரர்களை, நான் என்றும் மறக்க முடியாது. இந்த இலட்சிய வேங்கைகளின் தளராத உறுதிதான் எமது சுதந்திர இயக்கத்தின் தூண்களாக நின்றன.

**தமிழீழத் தேசியத் தலைவர்**
**மேதகு வே. பிரபாகரன்அவர்கள்.**

## வரி விளம்பரம்

### தவறிவிட்டது

17-11-2003 திங்கட்கிழமை (நேரம் 9.45) அன்று முகமாலை- பளை பேருந்து வண்டியில் அல்லது பளை சோதனைச்சாடியில் பெண்கள் கைக கடிகாரம் ஒன்று தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் ஈழநாதம் காரி யாலயத்தில் ஒப்படைக்கவும். சன் மானம் வழங்கப்படும். (3881)

### தமிழீழ தேசப் படம்

தமிழர் மரபு வழித் தாயகப் படம சகல சிறு ஊர்களையும் குறித்த படி வர்ணத்தில் வெளிவந்துள்ளது. அனைத்து அறிவமுது பொத்தக சாலையிலும் கிடைக்கும். (சி-8805)

### வார செய்தித் தாள்கள்

தமிழ் அலை, செந்தணல், வீர கேசரி, தினக்குரல் மற்றும் சகல ஆங்கில வார இதழ்களும் அருகில் உள்ள அறிவமுது பொத்தகசாலை யில் கழிவுடன் கிடைக்கும் (சி-8806)


# இ.தன்னாட்சி அதிகார சபை தமிழினத்தின் ஒட்டு மொத்த வாழ்வுரிமையைக் கோருகிறது

## யாழ். பல்கலை நிகழ்வில் நீதி நிர்வாகதுறைப் பொறுப்பாளர் பரா

(யாழ்ப்பாணம்)

புலிகளால் தற்பொழுது முன் வைக்கப்பட்டுள்ள இடைக்கால தன் னாட்சி அதிகார சபைத் திட்ட வரைவு புலிகளின் சுயநலத்தைக் கருத்தில் கொள்ளாது ஒட்டுமொத்த தமிழினத்தின் வாழ்வுரிமையைக் கோரும் விதமாக அமைக்கப்பட் டுள்ளது. இவ்வாறு தமிழீழ நீதி நிர்வாகத்துறைப் பொறுப்பாளர் பரா விளக்கமளித்துள்ளார்.

நேற்றைய தினம் யாழ். பல் கலைக்கழகத்தில் நடைபெற்ற பல் கலைக்கழக ஊழியர் தின விழா வில் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

யாழ். பல்கலைக்கழக ஊழியர் சங்கத் தலைவர் சி. தங்கராசா தலை மையில் நடைபெற்ற இந்நிகழ்வில் யாழ். பல்கலையின் அனைத்துப் பிரதிநிதிகள் தென் இலங்கையில் உள்ள பல்கலைக்கழகப் பிரதிநிதிகள் அனைத்துப் பல்கலைக்கழக ஊழியர் சங்கத் தலைவர் லயனல் மல்வத்த ஆதியோர் உட்பட போராளிகள், பொது மக்கள், பல்கலை மாணவர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

அங்கு தொடர்ந்து உரையாற் றிய அவர், உரிமைகள் மறுக்கப் பட்ட தமிழினம் தன் உரிமை கோரி போராடி வென்றதன் பயனாக உரு வான இந்த சமாதானத்தினூடாகத்தான் அரசியல் எதிர்காலத்தை சிறந்த தாக மாற்றி அதை உறுதி செய்து கொள்ள வேண்டும் என்பதற்காகவே புலிகள் பிரதிநிதித்துவப்படுத்தும் இனத்தின் எதிர்காலத்திறகான ஒரு இடைக்கால நிர்வாக சபைத் திட் டத்தை முன்வைத்திருக்கிறார்கள் என்றார். (33)

# பாதாள உலகக் குழுவால் ஒருவர் உடுகம்பரவில் சுட்டுக்கொலை

(கொழும்பு)

உடுகம்பர பிரதேசத்தில் இனந் தெரியாதோர் நடத்திய தாக்குதலில் ஒருவர் கொல்லப்பட்டு மூவர் படு காயமடைந்துள்ளனர்.

வான் ஒன்றில் வந்த இனந்தெரி யாத நபர்கள் இக்கொலையைப்புரிந் துள்ளனர். பாதாள உலகக் கோஷ்டிக்கு இடையிலான தகராறே இதற்குக் கார ணம் என்று பொலிசார் தெரிவித்துள்ளனர்.

# சமாதானம் பின்தள்ளப்படுவதால் நாடு படுகுழியில் விழப்போகிறது

## - வஜிரானந்ததேரர் எச்சரிக்கை

(கொழும்பு)

இரண்டு பிரதான கட்சிகளும் தற் பொழுது ஒரு பலப் பரீட்சையில் ஈடுபட்டு வருகின்றன. இதனால் சமா தானம் பின் தள்ளப்பட்டு நாடு மீண் டும் படுகுழியில் விழப்போகிறது.

ஆனபடியால் இரண்டு கட்சி களும் ஒன்றிணைந்து நாட்டின் சமாதா னத்தை முன்னெடுத்துச் செல்வ தற்கு முன்வரவேண்டும் என வாரி யப்பொல பௌத்த சங்கத்தைச் சேர்ந்த வஜிரானந்ததேரர் கூறியுள் ளார்.

இந்த நாட்டுமக்கள் எல்லோரும் சமாதானமாக வாழவேண்டும் என் பதையே பௌத்த சங்கமாகிய நாங் கள் விரும்புகிறோம். ஆனபடியால் தத்தமது கட்சிகளை வளர்க்காமல் நாட்டின் எதிர்கால நன்மைகளைக் கருதி இடைநிறுத்தப் பட்டுள்ள சமா தானத்தை மீண்டும் முன்னெடுத்துச் செல்லவேண்டும் என வாரியப்பொல வஜிரானந்த தேரர் மேலும் கூறி யுள்ளார்.

# சனாதிபதியின் படத்தை உடைத்த ஐ.தே.கட்சியினர் 10 பேர் மீது விசாரணை

## – சிலாபம் பொலிசார் நடவடிக்கை

(கொழும்பு)

சிலாபம் அரச மருத்துவமனையில் தொங்கவிடப்பட்டிருந்த சனாதிபதி யின் உருவப்படங்களை ஐக்கிய தேசியக் கட்சி ஆதரவாளர்கள் அடித்து நொருக்கியது சம்பந்தமாக வடமேல் மாகாணத்தைச் சேர்ந்த பத்து ஐக்கிய தேசியக் கட்சி பாரா ளுமன்ற உறுப்பினர்களுக்கு எதி ராக சிலாபம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி நடவடிக்கை எடுத் துள்ளார்.

இச்சம்பவம் குறித்து விசாரணை நடத்த குழு ஒன்றையும் பொறுப்பதி காரி நியமித்துள்ளார்.

பாரபட்சமற்ற விசாரணைகள் நடத்தி இரண்டு நாட்களுக்குள் அறி க்கை சமர்ப்பிக்குமாறு அக்குழு விற்கு வேண்டுகை விடுக்கப்பட் டுள்ளது.

# வவுனியாவில் இரு இளைஞர்களை காணவில்லை என முறையீடு

(வவுனியா செய்தியாளர்)

வவுனியாவில் இரு இளை ஞர்களைக் காணவில்லை என மனித உரிமைகள் ஆணைக்குழு வில் முறையீடு செய்யப்பட்டுள்ளது.

மல்லாவியைச் சேர்ந்த காந்தராசா தவசீலன், தலவாக்கலையைச் சேர்ந்த பெருமாள் செல்வக்குமார் ஆகிய இரு இளைஞர்களும் கடந்த சில தினங்களாக வவுனியாவில் வைத்து காணாமற்போயுள்ளதாக பெற்றோர் வவுனியா மனித உரிமை கள் ஆணைக்குழு அலுவலகத்தில் முறையீடு செய்துள்ளனர்.இவர்கள் தொடர்பான தகவல் களை வவுனியா மனித உரிமை கள் ஆணைக்குழு தேடி வருகின்றது. (10)

# புதிய வெளியுறவுச் செயலாளர் இந்திய அரசால் நியமனம்

(புதுடில்லி)

இந்தியாவில் புதிய வெளியுறவுச் செயலாளராக சிஷாங் நியமிக்கப் பட்டுள்ளார்.

தற்போதைய செயலாளர் கன் பால் சில்வா இம்மாதம் 30ஆம் திகதி ஓய்வுபெறுவதைத் தொடர்ந்து இவர் நியமிக்கப்பட்டுள்ளார். அமைச் சரவை யின் நியமன கமிட்டி இதற்கு நேற்று முன்தினம் ஒப்புதல் அளித்துள்ளது.

# மட்டுவில் வடக்கு ஸ்ரீவேற்பிள்ளை சனசமூக நிலையம் புனரமைப்பு

(தென்மராட்சி)

கடந்த கால யுத்த அனர்த் தங் களின்போது அழிவிற்குள்ளாகியி ருந்த மட்டுவில் வடக்கு ஸ்ரீவேற்பிள்ளை சனசமூக நிலையம் மீள் புனரமைக் கப்பட்டு திறந்து வைக்கப் பட்டுள்ளது.

இலங்கைக்கான ஜப்பான் நாட்டு தூதுவராயலத்தின் முதன்மை செய லர் கிறோசி கறுபே வைபவ ரீதி யாக சனசமூக நிலையக் கட்டடத் தின் நாடாவைவெட்டித் திறந்து வைத்தார்.

சனசமூக நிலையத் தலைவர் க. பேரின்பநாதன் தலைமையில் இடம் பெற்ற இத்திறப்பு விழா நிகழ்வில், கப்டன் பெர்பலகையை தமிழீழ விடு தலைப்புலிகளின் சாவகச்சேரி அர சியல்துறைப் பொறுப்பாளர் தமிழ் மாறன் திரைநீக்கம் செய்து வைத் தார்.

ஜப்பானிய தொண்டு அமைப் பான 'அம்டா' நிறுவனத்தால் சுமார் ஒரு மில்லியன் ரூபா நிதி ஒதுக் கீட்டின் கீழ் இக்கட்டடம் மீள் நிர் மாணம் செய்யப்பட்டுள்ளது.

'அம்டா' சமூக அபிவிருத்தித் திட் டத்தின், திட்டப் பணிப்பாளர் செல்வி. சி. யொசிமி, யாழ். பிரதேச திட்ட இணைப்பாளர் கிறோயுக்கி ஒக்கா சக்தி ஆகியோரும் திறப்பு விழா நிகழ்வில் கலந்து கொண்டனர்.

சனசமூக நிலையத்திற்கான இலத்திரனியல் உபகரணங்கள் மற் றும் அப்பகுதி விவசாயிகளுக்கான நீர் இறைக்கும் இயந்திரங்களும் தூதுவராலய அதிகாரிகளால் நிகழ் வில் வழங்கப்பட்டன. (27)

# தேர்தல் ஒன்றே வழி

தற்பொழுது நாட்டில் எழுந்துள்ள பிரச சினைகளிலிருந்து மீள்வதற்குப் பொதுத் தேர்தல் ஒன்றே சிறந்த வழியாகும் என அமைச்சர் எஸ்.பி.திஸாநாயக்க கூறி யுள்ளார். பொது சன ஐக்கிய முன்னணி யின் தேர்தல் விஞ்ஞாபனத்தைத் தயாரித் தவர்கள் நானும் ஜீஎல்பீரிசும் ஆவோம். மீண்டும் பொதுத் தேர்தலை நடத்தி எமது வெற்றியை நிரூபிக்கப்போகிறோம் என அமைச்சர் எஸ்.பி.திஸாநாயக்க கூறி யுள்ளார். ஜே.வி.பி.பொதுசன ஐக்கிய முன்னணி கூட்டு ஒப்பந்தம் அரசாங் கத்தைக் கைப்பற்ற உதவக்கூடும் என மீன்பிடித்துறை அமைச்சர் மகிந்த விஜேசேகர தெரிவித்தார். ஜே.வி. பி.க்கும் பொதுசன ஐக்கிய முன் னணிக்கும் இடையிலான கூட்டு சம் பந்தமான பேச்சுவார்த்தை புதிய விடய மல்ல. நீண்ட காலமாக வருவ தென்று இதில் ஆச்சரியப்படுவதற்கில்லை என கிறிஸ்தவ மத விவகார அமைச் சர் ஜோன் அமரதுங்க கூறியுள்ளார்.


## முக்கிய அறிவிப்பு

ஒட்டுசுட்டான் வீதி புதுக்குடியிருப்பில் அமைந்துள்ள தென்றல் இலத்திரனியல் நிறுவனத்தில் (தென்றல் கடை) 01-06-2003 இற்கு முன்பு திருத்தக் கொடுத்த இலத்திரனியல் பொருட்கள், மணிக்கூடுகள் என்பனவற்றை மீளப் பெறாதவர்கள் எதிர்வரும் 20-12-2003இற்குள் உரிய ஆவணத்துடன் சமுகம் தந்து அப்பொருட்களை மீளப் பெற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம். மேற்குறித்த திகதிக்குள் மீளப் பெறப்படாத பொருட்களுக்கு நாம் பொறுப்பாளிகள் அல்ல என்பதையும் தெரியப்படுத்திக் கொள்கிறோம்

நிர்வாகம்.

(3733)


## நீங்காத நினைவில்...

## 04 ஆம் ஆண்டு 08 ஆம் ஆண்டு



சிறப்பு எல்லைப்படை
கப்டன் வில்லவன்/யூட்
(பாலகிருஸ்ணன் கிருஸ்ணகுமார்)

பிறப்பு
13-06-1970 31-01-1965

வீரச்சாவு
03-12-1999 28-07-1995

நாளெல்லாம் உன் நினைவு
நாவெல்லாம் உன் பேச்சு
தேனாக இனித்த குரல் தேயுமென்று
யார் கண்டார்.



கடற்புலி
கப்டன் கலைமகள
(சுப்பிரமணியம் பத்மலோஜினி)

கி. பத்மஜோதி
கி.வர்ணிஜா

(3883)

## காணவில்லை



பேரம்பலம் கணேசலிங்கம்

புதுமுறிப்பு, உருத்திரபுரம்
(அம்பாள் திரையரங்க உரிமையாளர்)

மேற்காணும் முகவரியைக் கொண்ட பே. கணேசலிங்கம் 18-11-2003 அன்று இரவு 10.30 மணியளவில் காணாமற் போயுள்ளார். இவரைப் பற்றிய தகவல் தெரிந்தவர்கள் தயவு செய்து கீழ்க்காணும் முகவரிக்குத் தொடர்பு கொள்ளவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

தகவல்:

முறிப்பு வான் இராசன்
வான். இல. த. 17.0242

அன்பு வெதுப்பகம்,
ஆனந்தநகர்,
கிளிநொச்சி.

(3509)

# ஈராக்கிற்குப் படைகளை அனுப்பினால் டோக்கியோவிலுள்ள முக்கிய நிலைகளைத் தாக்குவோம்

## அல்-ஹைதா ஜப்பானுக்கு எச்சரிக்கை

ஈராக்கிற்கு படைகளை அனுப்பினால் டோக்கியோவில் முக்கியத்துவம் வாய்ந்த பகுதிகளைத் தாக்குவோம் என அல்ஹைதா அமைப்பு ஜப்பானை எச்சரித்துள்ளது.

இதனிடையே உலகம் முழுவதும் பயங்கரவாத அச்சுறுத்தல்கள் இருப்பதாகவும், இவ் அச்சுறுத்தல் குறித்து ஜப்பான் அடிபணி யாதெனவும் ஜப்பானிய பிரதமர் யுனிசிரோ கொய்சுமி கூறியுள்ளார். அல்ஹைதாவின் இவ் அச்சுறுத்தல் ஜப்பானின் பங்கு, மற்றும் அந்நியச் செலாவணி சந்தையிலும் எதிரொலித்துள்ளது.



ஈராக்கை கட்டியெழுப்பும் நடவடிக்கையாக தமது அமைதிப்படையை அனுப்புவது பற்றி ஜப்பான் யோசித்துள்ள நிலையில் மீண்டும் பிரதமராகத் தெரிவு செய்யப்பட்ட சட்டசபைக்குள் நுழையும் பிரதமர் யுனிசிரோ கொய்சுமி.

# வாயில் கறுப்புத் துணி கட்டி ம.தி.மு.க.வினர் போராட்டம்

மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத்தின் தொண்டர்கள் கடந்த திங்கட்கிழமை வாயில் கறுப்புத் துணி கட்டி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

பொடோ வழக்கில் கைது செய்யப்பட்ட ம.தி.மு.க பொதுச் செயலாளர் வை.கோவை நீதிமன்றத்தில் முன்நிறுத்தும் போது பத்திரிகையாளர்களை சந்திக்க விடாமல் காவல்துறையினர் தடுத்து வருவதைக் கண்டித்தே இவர்கள் இவ் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. அத்துடன் நீதிமன்ற வளாகத்தில் வை.கோவை மதிய உணவு உண்ணவிடாமல் காவல்துறையினர் தடுத்து வருகின்றமை குறித்தும் இவர்கள் தமது எதிர்ப்பினைத் தெரிவித்துள்ளனர்.

# வேலை நிறுத்தம் செய்த 587 ஊழியர்கள் தமிழக அரசால் பணி நீக்கம்

பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி கடந்த ஜூலை மாதம் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்ட 587 அரச ஊழியர்களை தமிழக அரசு பணி நீக்கம் செய்துள்ளது.

வேலை நிறுத்தத்தில் ஈடுபட்ட 2768 ஊழியர்களின் விசாரணை மேற்கொண்ட மூன்று நீதிபதிகள் அடங்கிய விசாரணைக் குழு தனது அறிக்கையைக் கடந்த வாரம் தமிழக அரசிடம் கையளித்திருந்தது. இவ் விசாரணைக் குழுவின் பரிந்துரையின்படி 587 அரச ஊழியர்களை தமிழக அரசு வேலை நீக்கம் செய்துள்ளது. இவர்களில் 530 பேர் தலைமைச் செயலக ஊழியர்கள் எனவும் 57பேர் அரச அலுவலகங்களில் பணியாற்றுவோர் எனக் கூறப்படுகிறது.

# கிரிக்கெட் பார்த்துக்கொண்டிருந்த நால்வர் அசாமில் சுட்டுக் கொலை

இந்தியாவில் அசாம் மாநிலத்தில் கிரிக்கெட் பார்வையாளர்கள் 04 பேர் கொல்லப்பட்டுள்ளனர்.

தீவிர வாதிகள் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்திலேயே இவர்கள் இறந்துள்ளதாக பொலிசார் கூறியுள்ளனர். எண்ணெய், தேயிலை வளம் நிறைந்த இம் மாநிலத்தில் லெப்ரி மாவட்ட கிரிக்கெட் அணிகளுக்கிடையிலான போட்டிகளைப் பார்வையிட்டவர்களே தீவிரவாதிகளின் தாக்குதலுக்கு இலக்காகியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# ஹிட்லர், முசோலினியை விட மோசமாக ஜெயலலிதா நடக்கிறார்

## - பா.ம.க.நிறுவுனர் டாக்டர் ராம்தாஸ்

இன்று கோர்க்கப்பட்ட கைகள் ஜெயலலிதா ஆட்சியை அகற்றும் வரை ஒன்றிணைந்து நிற்கும் என டாக்டர் ராம்தாஸ் கூறியுள்ளார்.

விழுப்புரத்தில் நடந்த மனித சங்கிலிப் போராட்டத்தில் கலந்து கொண்ட பின்னர் தி.மு.க. மாவட்ட அலுவலகத்திற்கு டாக்டர் ராம்தாஸ் வந்தார்.

அங்குள்ள நிருபர்களிடம் கூறியதாவது;

ஹிட்லர், முசோலினி, உகண்டா இடிஅமீன் போன்றவர்களைப் பற்றி நாம் அனைவரும் சரித்திரத்தில் தெரிந்துகொண்டிருக்கிறோம். தற்போது பாகிஸ்தானில் அதன் சனாதிபதி முஷாரவ்வும், அதேபோல தமிழ்நாட்டில் ஜெயலலிதாவும் செயற்பட்டு வருகின்றனர்.

மக்கள் கிண்டல் செய்கின்ற அளவிற்கு மிகப் பெரிய சர்வாதிகாரியாக ஜெயலலிதா செயற்பட்டு வருகின்றார்.

பாகிஸ்தான் வெளியுறவுத் துறை அமைச்சர் கூடத் தனது பேட்டியில் தமிழகத்தில் பத்திரிகைச் சுதந்திரம், பேச்சுரிமை, எழுத்துரிமை எதுவுமே இல்லையென்று கூறியுள்ளார். இந்த அளவிற்கு மோசமான நிலை வேறு எங்கும் இருக்க முடியாது. பேச்சுரிமை,எழுத்துரிமை,பத்திரிகைச் சுதந்திரம் என்பனவற்றைப் பறிப்பது தமிழகத்தில்தான். அ.தி.மு.க.ஆட்சியில் தான் பலமுறை பத்திரிகையாளர்கள் மீது தாக்குதல் நடந்துள்ளது.

1987 இல் ஆனந்தவிகடன் ஆசிரியருக்கு 3 மாத சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது. 1992 இல் ஜெயலலிதா ஆட்சியில் நிருபர் சுனில் என்பவருக்குப் பிடியாணை பிறப்பித்தது. 1996 இல் தி.மு.க. இந்த வழக்குகளை இல்லாமல் நீக்கியது.

இதுவரை 52 வழக்குகள் அ.தி.மு.க. ஆட்சியில் பத்திரிகையாளர்கள் மீது போடப்பட்டது.

சட்டமன்றத்தில் வீராப்பாகப் பேசி வந்த காளிமுத்து தற்போது துணைப் பிரதமர் அத்வானிக்கு எழுதிய கடிதத்தில் உயர் நீதிமன்றத் தீர்ப்பை மதித்துச் செயற்படுவோம் என்று கூறியுள்ளார்.

பத்திரிகைச் சுதந்திரம் பறிக்கப்படுவதையடுத்துதே தமிழகத்தில் கன்னியாகுமரி முதல் சென்னைவரை மக்கள் கரம் கோர்த்து மனிதசங்கிலிப் போராட்டத்தை நடத்தியுள்ளார்கள். இன்று கோர்க்கப்பட்ட கைகள் ஜெயலலிதா ஆட்சி அகற்றப்படும்வரை ஒன்றிணைந்தே நிற்கும்.

விழுப்புரத்தில் நடந்த மனித சங்கிலிப் போராட்டம் பெரியளவில் நடந்துள்ளது. இதைத் தொடர்ந்து அடுத்த போராட்டத்தை தி.மு.க.தலைவர் கருணாநிதி அறிவிப்பார் என்றும் கூறியுள்ளார்.



சுதந்திர வர்த்தக வலயம் அமைப்பது தொடர்பாக புளோரிடாவில் நடைபெறும் உச்சி மகாநாட்டைக் கண்டித்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ள அனைத்துலக ஆர்ப்பாட்டக்காரர்கள்.



ஒத்துழைப்புடன் கூடிய ராணுவ சமநிலையை ஏற்படுத்தும் உடன்படிக்கை ஒன்றை ஏற்படுத்த வியட்நாம் – அமெரிக்க நாடுகள் முயற்சி எடுத்துள்ள நிலையில் சைகோன் (ஹோசிமின்) துறைமுகம் நோக்கிச் செல்லும் அமெரிக்க போர்க்கப்பல்.

# தமிழக கங்கிரசின் இரட்டைத் தலைமை மாற்றம் ஜி.கே.வாசன் புதிய தலைவராக நியமனம்

## சோனியாவின் அதிரடி நடவடிக்கை

தமிழக காங்கிரஸ் கட்சியின் புதிய தலைவராக ஜி.கே.வாசன் நியமிக்கப்பட்டுள்ளார்.

இக் கட்சியின் இரட்டைத் தலைவர்களாக இதுவரையும் இருந்த பாலகிருஷ்ணனும், இளங்கோவனும் அப்பதவிகளிலிருந்து நீக்கப்பட்டுள்ளனர். சோனியா காந்தியின் இவ் அதிரடி நடவடிக்கையினால் அவ்விரு தலைவர்களும் விசனம் கொண்டுள்ளதாகத் தெரிய வருகிறது.

இவர்கள் இருவரும் வாசனுக்கு எதிராகச் செயற்பட்டு வந்தமையால் இரட்டைத் தலைமை முறையை நீக்க வேண்டுமென வாசன் கோரிக்கை விடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது. ஐந்து மாநில சட்டசபைத் தேர்தல்களில் தீவிரம் காட்டிவரும் சோனியா தமிழக காங்கிரசின் தலைமையை மாற்றியமைக்கு இளங்கோவன் கருணாநிதியின் ஆதரவாளராக இருப்பதே காரணம் எனக் கூறப்படுகின்றது. காங்கிரஸ் கட்சியின் வரலாற்றில் முதன்முறையாக 38 வயதான வாசன் தமிழக காங்கிரஸ் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## முலாயம்சிங் அரசு மறுப்பு

அயோத்தியில் பாபர்மசூதி இடிக்கப்பட்ட வழக்கில் அத்வாணி மீது சதித்திட்டம் தீட்டியதான குற்றச்சாட்டை நீக்கிவிட்டு சி.பி.ஐ தயாரித்திருக்கும் குற்றப்பத்திரிகையின் இணைப்பை ஆதரிப்பதாகக் கூறப்படுவதை உத்தரப் பிரதேச முலாயம்சிங் அரசு மறுத்துள்ளது.

உச்ச நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ள புதிய வாக்குமூலத்தில் இம் மறுப்புக் கூறப்பட்டுள்ளது.

## திரும்ப அழைப்பு

ஆப்கானிஸ்தானில் சென்ற வாரம் பிரெஞ்ச் உதவிப்பணியாளர் ஒருவர் தொடர்ந்து தனது பணியாளர்கள் சிலரைத் திரும்ப அழைத்துக்கொள்ளும் பணியை ஐ.நா.ஆரம்பித்துள்ளது.

தெற்கு மற்றும் கிழக்கு ஆப்கானிஸ்தானில் பல்வேறு மாகாணங்களில் அகதிமையங்களை சர்வதேசக் கணிப்பாளர்கள் மூடுவதாக அகதிகளுக்கான ஐநா. உயர்ஸ்தானிகராலயம் கூறியுள்ளது.



ஜெர்மனியில் வரவு செலவுத்திட்டத்தில் பொலிசாரின் சீருடைகளுக்கான நிதியை அரசு நீக்கி விட்டதால் ஆர்ப்பாட்டப் பேரணியில் இறங்கியுள்ள அந்நாட்டுப் பொலிசார்.

# இத்தாலியில் வசிக்கும் யூதர்கள் இஸ்ரேல் திரும்பக் கோரிக்கை

இத்தாலியில் வசிக்கின்ற யூதர்களை இஸ்ரேல் வருமாறு இஸ்ரேல் பிரதமர் ஏரியல் ஷெரோன் அழைப்பு விடுத்துள்ளார்.

இத்தாலி சென்றுள்ள ஏரியல் ஷெரோன் அங்கு உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

மேலும் சர்வதேச ரீதியிலும் இஸ்ரேலியர்களுக்கெதிராக அதிகரித்து வருகின்ற எதிர்ப்புக்களிலிருந்து தப்பித்துக்கொள்ள வேண்டுமாயின் இஸ்ரேலுக்கு வருவதே அனைத்து யூதர்களுக்கும் பாதுகாப்பைப் பெற்றுத் தரும் என்றும் கூறியுள்ளார்.

அத்துடன் இஸ்ரேல் யூதர்களைப் பாதுகாக்கும் என்றும் அதுவே யூதர்கள் பாதுகாப்பாகக் குடியிருக்க முடியுமான நிலம் என்றும் கூறினார்.

ஐரோப்பிய நாடுகளில் அண்மைக் காலமாக யூதர்களுக்கு எதிரான வன்முறைகள் அதிகரித்து வருகின்றன. ஐரோப்பிய நாடுகளில் வசிக்கின்ற யூதர்கள் பலர் இனம் தெரியாதவர்களால் தாக்கப்பட்டும், கொலை செய்யப்பட்டும் வருகின்றனர். இதனால் ஐரோப்பிய நாடுகளில யூதர்களால் பாதுகாப்பாகச் சுதந்திரமாக வசிக்க முடியாத சூழ்நிலை ஏற்பட்டு வருகின்றது.

அதேவேளை, யூதர்களுக்கும அமெரிக்கர்களுக்கும் எதிரான தாக்குதல்களைத் கொண்டு நடத்துவதாக அல்-ஹைதா எச்சரிக்கை விடுத்துள்ளது குறிப்பிடத்தக்கது.


இத்தாலிக்கு விஜயமொன்றை மேற்கொண்டுள்ள இஸ்ரேலியப் பிரதமர் ஏரியல் ஷெரோன் நேற்று இத்தாலிய வெளிவிவகார அமைச்சரைச் சந்தித்துள்ளார்.

இத்தாலியப் பிரதமர் பேர்லுஸ்கேனியைச் சந்திக்கவுள்ள ஷெரோன் இத்தாலியிலுள்ள யூதர்களுக்கு எதிராக அதிகரித்து வருகின்ற வன்முறைகள் குறித்தும் கலந்துரையாடியுள்ளார்.

# தென்னைகளுக்கு ஈரக்காப்பிடல் வரட்சிக் காலத்தைத் தாங்க உதவும்

இராணுவ நடவடிக்கை காரணமாகக் கடந்த பல வருடகாலமாகக் கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள தென்னை பயிர்ச் செய்கையாளர்கள் பராமரிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியாத நிலை ஏற்பட்டிருந்தது.

தற்போது மக்கள் மீளக் குடியமர்ந்துள்ள நிலையில் தென்னைப் பயிர்களைப் பராமரிப்பதில் ஆர்வம் காட்டி வருகின்றனர். இவர்களுக்கு வழங்கப்படும் மானியங்கள் தொடர்பாகவும் உரமிடல் பராமரிப்புத் தொடர்பாகவும் கிளி.மாவட்ட தென்னை அபிவிருத்திச் சபை உத்தியோகத்தர் க.தனிநாயகம் அவர்களிடம் கேட்டோம்.



குறுகிய இடைத் தூரத்தில் நடுகை செய்யப்பட்ட தென்னை மரங்களுக்கிடையே, நான்கு தென்னைகளுக்கு நடுவில் குழிகளை அமைக்கலாம்.

**கேள்வி:-** தற்போது தென்னை அபிவிருத்திச் சபையினரால் மேற்கொள்ளப் பெற்றுவரும் மானிய உதவித் திட்டங்கள் குறித்துப் பயிர்ச்செய்கையாளர்களுக்குத் தாங்கள் தெரிவிக்க விரும்புவது...

**பதில்:-** தென்னைச் செய்கையாளர்கள் பயன் பெறக் கூடிய வகையில் தென்னை அபிவிருத்திச் சபை தற்போது பல மானிய உதவித் திட்டங்களை அறிமுகப்படுத்தி வருகின்றது. அத்திட்டங்களில் ஒன்றே ஈரக்காப்பிடல்.

இத்திட்டத்திற்குப் பசளைகள் இடப்பட்டதற்கான கொள்முதல் சிட்டைகள் சமர்ப்பிக்கப்படும் பட்சத்தில் மானியம் வழங்கப்பட்டு வந்தது.

கடந்த வருடம் கிளிநொச்சி மாவட்ட அரச செயலகத்திற்கு வருகை தந்திருந்த தென்னை அபிவிருத்திச் சபைத் தலைவர் லிங்கன் பெர்னாண்டோவிடம் எமது அரச அதிபர் தி.இராசநாயகம் இத்திட்டத்திற்குப் பசளை இடப்பட்டதற்கான கொள்வனவுச் சிட்டை இல்லாவிடினும் மானியம் வழங்கும்படி விடுத்த கோரிக்கையினை ஏற்றுக்கொள்ளப்பட்டது.

இதன் பிரகாரம் ஈரக்காப்பிடல் மானியத்திற்குச் சிட்டை இருப்பினும், இல்லாதுவிடினும் மானியம் வழங்க தென்னைச் சபை நடவடிக்கை எடுத்து வருகின்றது.

## ஈரக்காப்பீடல் [உரிமட்டைக்குழி]

வடமாகாண தென்னைப் பயிர்ச்செய்கையாளர்கள் மேற்கொள்ள வேண்டிய ஒரு முக்கிய நடவடிக்கை இதுவாகும்.

இது வைகாசி தொடக்கம் புரட்டாதி மாதம் வரையிலான வரண்டகாலப் பகுதியில் தென்னை மரங்களுக்கு வரட்சியைத் தாக்குப் பிடிக்க உதவுகின்றது. தேங்காய் உரிமட்டையில் கூடிய பொட்டாஸ் சத்துக் காணப்படுவதுடன் நீரையும் தன்னகத்தே உறிஞ்சி வைக்கக் கூடியது. தென்னைக்குப் பொட்டாஸ் இன்றியமையாததொன்றாகும். எனவே நிலத்திலிருந்து இழக்கப்படும் பொட்டாஸ் சத்துப்பொருளினை உரிமட்டைகளை நிலத்தில் புதைப்பதன் மூலம் தென்னை மரங்கள் பெற்றுக்கொள்ள ஏதுவாகின்றது. தென்னை மரமானது 30-45 வரையான பச்சை ஓலைகளையும்.,சிறு குரும்பை முதல் முட்டுக்காய் தேங்காய்க் குலைகளையும் கொண்ட பாரிய நிறையினைத் தாங்கி நிற்கின்றது.



இதற்கு உறுதுணையாக இருப்பது 3-4 மீற்றர் நீளமான நங்கூர வடிவமைப்பிலுள்ள 4000-8000 வரையிலான நார் வேர்களாகும். அத்துடன் அடியிலிருந்து 3-4 அடி வரை உள்ள வேர்த் தொகுதி கடினத் தன்மையடைந்து தென்னை மரங்களுக்குத் தாங்கும் சக்தியினைக் கொடுத்து வருகின்றது. எனவே உரிமட்டைக்குழி அமைக்கும் போது வேர்கள் சேதமடையாது குழிகள் அமைப்பது முக்கியமானதாகும்.

கிளிநொச்சி மாவட்டத்தில் சில இடங்களில் விவசாயிகள் தென்னை மரங்களைக் குறைந்த தூர இடைவெளியில் நாட்டியுள்ளார்கள் எனவே குழி அமைக்கும் போது வேர்கள் சேதமடையக் கூடிய நிலை உருவாகலாம். எனவே இப்படிப்பட்ட செய்கையினை மேற்கொண்டவர்கள் 4 மரங்களுக்கு நடுவில் குழிகளை அமைக்கலாம். உரிய இடைத் தூரங்களில் நடுகை மேற்கொள்ளப்பட்டிருப்பின் 22'x22', 24'x24', 25'x25', 26'x26' என இரண்டு மரங்களுக்கிடையில் குழி அமைப்பது மிகச் சிறந்ததாகும். மேலும் இரண்டு வரிசைக்கிடையில் நடுவில் நீண்ட குழி அமைத்தும் உரிமட்டைகளைப் போட முடியும்.

**கேள்வி:-** மேற்படி குழிகள் வெட்டப்படும் பொழுது அதற்கான பிரமாணங்களைக் கவனத்தில் கொள்ளாதுவிடின் ஏற்படும் பின்விளைவுகள் குறித்துத் தெரிவிப்பீர்களா?

**பதில்:-** 1. குழிகள் வெட்டப்படும் பொழுது வெட்டப்படும் வேர்கள் ஊடாக "கணோடேமா" என்ற பங்கசு பரவி மரத்தில் சுருக்கம் ஏற்பட்டு, ஓலைகள் மடிந்து, மரம் அழியக்கூடிய ஏதுநிலை உண்டாகும். இந் நிலை அநேக இடங்களில் காணப்படுகின்றது. எவ்வித அறிகுறியுமின்றி மரம் பட்டுப்போகும் இதனால் தொடர் வரிசையிலுள்ள மரங் களுக்கும் நோய்கள் பரவும்.

2. திடீரெனத் தேங்காயின் உற்பத்தியில் குறைவு ஏற்பட்டு இருவருடங்களின் பின்பே மீண்டும் தென்னை காய்க்கத் தொடங்கும்.

3. தென்னை மரங்களுக்கு அருகாமையில் குழிகளை வெட்டுவதன் காரணமாக, பலமான காற்று வீசும் போது மரம் சாய்ந்து விழக்கூடிய அபாயம் ஏற்படும்.


**கேள்வி:-** உரிமட்டைக்குழி அமைக்கும் போது அவதானிக்க வேண்டிய விடயங்கள் குறித்துத் தெரிவிக்க முடியுமா?

**பதில்:-** 1. குழியினுள் தேங்காய் உரிமட்டை நிமிர்த்தியே இடப்படல் வேண்டும். கவிழ்த்துப் போடுதல் கூடாது.

2. வேறு ஓலை, மட்டைகள் என்பன குழியினுள் போடுதல் கூடாது.

3. மழைகாலம் முடியும் தறுவாயில் குழிகள் மூடப்பட வேண்டும்.

4. ஒன்றுவிட்டு ஒன்றாகக் குழிகள் அமைக்கப்பட வேண்டும்.



இரண்டு தென்னைகளுக்கு இடையில் குழி அமைத்தல் (குழியளவு – 8'x4'x2')

5. ஒரு ஏக்கரில் 30 குழிகள் அமைத்தல் வேண்டும். ஒரு குழிக்குள் 250 உரிமட்டைகள் போடப்பட வேண்டும்.

6. இதற்கு மானியம் 2400 ரூபா வழங்கப்படும்.

7. மரங்களுக்கு உரமிட்டால் ஒரு மெட்ரிக் தொன் 50 கிலோ கொண்ட, 20 பை உரம், ஒரு மரத்திற்கு 3 கிலோ வீதம் போடப்பட்டால் 2,750 ரூபா ஊக்குவிப்பு மானியமாக வழங்கப்படும்.

8. உரம் மரத்தின் அடியிலிருந்து 6' தூர வட்டத்துள் தூவி மண்ணைக் கொத்தி மண்ணுடன் கலக்க வேண்டும்.

மேற்படி வேலைத் திட்டத்தினை மேற்கொள்பவர்கள், மேற்கொண்டு வருப வர்கள் தங்களால் மேற்கொள்ளப்பட்ட விபரங் களை கிளி.மாவட்ட செயலகத்திலுள்ள தென்னை அபிவிருத்தி உத்தியோகத்தரை புதன் கிழமைகளில் சந்தித்துக் கையளிக்க லாம். 2003 மார்கழி மாதம் 12 ஆந் திகதிவரை இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படும்.

நேர்காணல்–கனகபுரச் சோதி

ஒரு தென்னை மரமானது அதன் வாழ்க்கைக் காலத்தில் (75 வருடங்கள்) ரூபா 90,000 வரையான வருமானத்தினைத் தரக்கூடியது என்பது முக்கியமாகக் கருத்தில் கொள்ள வேண்டியதொன்றாகும்.

# நாங்கள் வீதியில் இறங்கினால் புலிகள் இ.த. வரைவை மாற்றவேண்டிவரும்

## முன்னாள் பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க

சனாதிபதி பொறுப்புடன் விடுக்கப்பட்டுள்ள தேசிய நல்லிணக்க கூட்டணிக்கான அழைப்பை நிராகரிக்க முன்பு ஐ.தே.முன்னணி இருமுறை சிந்திக்கவேண்டும். அட்டாடிட்டில்லாமல் நாம் வீதியில் இறங்கினால் விடுதலைப்புலிகள் இடைக்கால சபை யோசனைகளை மாற்றி அமைக்க நேரிடும் என முன்னாள் பிரதமரும் பொ.ஐ.முன்னணி உறுப்பினருமான ரட்ணசிறி விக்கிரம நாயக்க தெரிவித்துள்ளார்.

நாட்டின் தற்போதைய அரசியல் பற்றி பொதுமக்களுக்கு எடுத்துக் கூறும் அலுத்கமவில் கூட்டம் ஒன்றில் பேசிய விக்கிரமநாயக்க மேலும் கூறியதாவது., ஜே.ஆரினால் கொண்டுவரப்பட்ட நிறைவேற்று அதிகாரமுறை தயாரிக்கப்பட்டிருப்பினும் நிறைவேற்று அதிகாரம் ஒரு கட்சியிடத்திலும் ஆளும் அதிகாரம் வேறொரு கட்சியிடத்திலும் இருக்கப்போவது பற்றி அவர் அன்று சிந்திக்கவில்லை.

எனினும் நாம் சட்டபூர்வமான ஆட்சியையே மதிக்கின்றோம். அதன்படி மூன்று அமைச்சுக்களையும் சனாதிபதி கையேற்றது சரியென்பதை நன்குணர்ந்த அரசியல்வாதிகள் ஏற்றுக்கொள்வர் எனவும் உயர் நீதிமன்ற நீதியரசருக்கெதிராக நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவரப்பட்டாலும் அதற்குப் பாராளுமன்ற பெரும்பான்மை கிடைக்காது எனவும் கூறியுள்ளார்.

விடுதலைப்புலிகளின் யோசனைகளை நாம் ஏற்பதும் நிராகரிப்பதும் வேறுவிடயம். ஆயினும் ரணிலை தொடர்ந்து சமாதான முயற்சிகளுக்கு பொறுப்பு வகிக்கவே கேட்கப்பட்டதை அவர் நிராகரித்தமை சிறந்த தலைமைத்துவத்தை அவர் இழந்தமைக்கு சமனாகும் என்று கூறியதுடன், தமது கட்சியும் அதிகாரப் பரவலாக்கலுக்கு விரும்பியதாகவும் அதனாலேயே 13ஆவது அரசியலமைப்பு மூலம் மாகாணசபைமுறை அறிமுகப் படுத்தப்பட்டதாகவும் கூறியுள்ளார்.

# வழக்கொன்றிற்காக சனாதிபதி நீதிமன்றில் ஆஜராகத் தேவையில்லை

## சட்டமா அதிபர் தெரிவிப்பு

(கொழும்பு)

வழக்கு ஒன்றின் நிமித்தம் சனாதிபதி நீதிமன்றில் ஆஜராகத் தேவையில்லை என சட்டமா அதிபர் நேற்று முன்தினம் கூறியுள்ளார்.

சுயாதீன தேர்தல் ஆணைக் குழுவிற்கு உறுப்பினர் ஒருவரை நியமிப்பதில் சனாதிபதி தாமதம் காட்டுவதாக குற்றம் சுமத்தி மக்கள் நலன் சங்கம் கொழும்பு மேன்முறையீட்டு நீதிமன்றில் மனு ஒன்றைத் தாக்கல் செய்திருந்தது. இந்த வழக்கில் பிரதிவாதியான சனாதிபதி நீதிமன்றில் ஆஜராக வேண்டுமா என்பதைத் தெரியப் படுத்துமாறு நீதிபதி சட்டமா அதிபரைக் கேட்டிருந்தார். இதற்குப் பதிலளித்த சட்டமா அதிபர் அரசியலமைப்பின் 35 ஆவது சரத்தின்படி சனாதிபதி நீதிமன்றில் ஆஜராகுவது விலக்களிக்கப் படுகிறது என்று கூறியுள்ளார்.

இவ் வழக்கின் விசாரணை நேற்று முன்தினத்துடன் முடிவடைந்ததோடு இதற்கான தீர்ப்பு வரும் டிசம்பர் 19 ஆம் திகதி வழங்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (32)

# மாவீரர் தினத்தை முன்னிட்டு பளையில் மரம் நடுகை

(வடமராட்சி கிழக்கு)

மாவீரர் நாளை முன்னிட்டு பளைப் பிரதேசத்தில் வனவளப் பாதுகாப்புப் பிரிவினரால் 250 மரக்கன்றுகள் விநியோகிக்கப்பட்டு நேற்று முன் தினம் அவைகள் நடுகை பண்ணப் பட்டன. அதன்படி முதல் நடுகையாகப் பளைப்பிரதேச சபைக் கட்டடத்தின் முன் 7 மரக்கன்றுகள் வைக்கப் பட்டன. முதல் மரத்தினைப் பளைக் கோட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் வின்சன் அவர்கள் நட்டுவைத்தார். அதனைத் தொடர்ந்து பச்சிலைப் பள்ளிப் பிரதேசசபைச் செயலாளர் நட்டு வைத்ததைத் தொடர்ந்து ஏனைய மரங்கள் நடுகையிடப்பட்டன. (11)

# தென்பகுதிப் பாடசாலை மாணவர் மீது தாக்குதல்கள் அதிகரிப்பு

## கொழும்பு வைத்தியசாலையில் 6 பேருக்கு சிகிச்சை

தென்பகுதியில் பாடசாலைகளில் மாணவர்கள் மீதான தாக்குதல்கள் தொடர்ந்து இடம்பெற்று வருவதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

கொழும்பு தேசிய வைத்திய சாலையில் பாடசாலை அதிபர்களாலும், ஆசிரியர்களாலும் தண்டிக்கப்பட்ட 06 மாணவர்கள் சிகிச்சை பெற்று வருவதாக வைத்திய சாலை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

கம்பஹா பண்டாரநாயக்க வித்தியாலய அதிபரால் தாக்கப்பட்ட ஒரு மாணவன் மேலதிக சிகிச்சைகளுக்காக கம்பஹாவிலிருந்து கொழும்பு தேசிய வைத்தியசாலைக்கு இடம் மாற்றப்பட்டுள்ளார். பாடசாலையில் இடம்பெற்ற கண்காட்சி ஒன்றின் செலவீனம் பற்றிக் கேள்வி எழுப்பிய காரணத்தினாலேயே இம் மாணவன் தாக்கப்பட்டுள்ளான். மாணவன் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் தொடர்பாக மாணவனின் பெற்றோர் உயர் நீதிமன்றத்தில் வழக்குத்தாக்கல் செய்துள்ளனர். அதிபர் மேற்கொண்ட இத் தண்டனையை எதிர்க்கும் வகையில் கம்பஹா பண்டாரநாயக்க வித்தியாலய ஒழுக்காற்று ஆசிரியர் குழு தற்போது ராஜினாமா செய்துள்ளது. இவ்விடயம் தொடர்பாக கல்வியமைச்சர் கூறுகையில்,

இதற்கான ஒழுங்கு நடவடிக்கைகள் உடனடியாக மேற்கொள்ளப்படுமென அவர் கூறியுள்ளார்.

# சமூக காடுவளர்ப்புத் திட்டம்

தமிழீழப் பிரதேசத்தில் அழிக்கப்பட்ட வனங்கள் மீள்வனமாக்கல் திட்டத்தின் கீழ் முன்மொழியப்பட்ட திட்டங்களில், சமூக காடு வளர்ப்புத்திட்டம் என்று வரையறுக்கப்பட்ட இத்திட்டமானது தமிழீழத்தில் முதன்முதலாகசம்பிரதாய பூர்வமாக கிளிநொச்சி மாவட்ட வனவளப்பாதுகாப்புப் பிரிவினரால் கடந்த 13.11.2003 வியாழக் கிழமை மு.பகல் 10.00 மணிக்கு ஆரம்பித்து வைக்கப்பட்டது.



இவ் வைபவமானது வெள்ளாங்குளம் பகுதியில் தெரிவு செய்யப்பட்ட வறுமைக் கோட்டுக்குள் வாழ்ந்து வரும் பத்து குடும்பங்கள் உள்வாங்கப்பட்டனர். ஒவ்வொருவருக்கும் தலா ஐந்து ஏக்கர் வீதம் காணிகள் வழங்கப்பட்டன. இவர்களின் தெரிவின் போது முன்னனுபவமும், விவசாயம் சம்பந்தமான ஆர்வமும்,சூழல் சம்பந்தமான ஆர்வமும், தேசநலனும் கவனத்தில் கொள்ளப்பட்டு தெரிவு செய்யப்பட்டமை முக்கிய அம்சமாகும். இக் காணிகள் துப்பரவு செய்து நடுகை மேற்கொள்ளும் வரை முதல் வருடத்திற்கு ஏக்கர்ஒன்றிற்கு 4500 ரூபா வீதம் ஒருவருடத்திற்கு 22500 திட்டமிடப்பட்ட ரீதியில் இப் பயனாளிகள் பத்துப் பேரும் தலா 20000 வீதம் பெற்று இத்திட்டத்தில் உள்வாங்கப்பட்டனர்.

அத்துடன் குறித்த பயனாளிகட்கு ஆரம்ப ஆண்டில் மீள் நடுகை செய்வதற்கான நாற்றுக்கள் மற்றும் உபகரணங்களும் வழங்கப்பட்டன. முக்கியமாக அவர்களது பொருளாதார மேம்பாடு கருதி ஊடுபயிர் செய்வதற்கான விதை தானியங்களும் வழங்கப்படவுள்ளன.ஊடு பயிரின் உற்பத்திப் பொருட்களையும் நிறுவனமே கொள்வனவு செய்யவும் உத்தேசித்துள்ளது .இது கொள்வனவு சந்தைப்படுத்தலின் தளம்பலையும் பாதிப்படையாமல் தடுக்கும் முயற்சியில் இரண்டாவது வருடத்தில் திட்டப்பராமரிப்பு தற்சார்புவிவசாயச்செய்கைக்காக ஏக்கர் ஒன்றிற்கு ரூபா 2500 வீதம் 5ஏக்கருக்கும் மொத்தமாக ரூபா 12500 வழங்கப்படும். மூன்றாவது வருடத்தில் பராமரிப்பு, தற்சார்பு, விவசாயம் என்பவற்றை ஊக்குவித்தல் என்பவற்றிக்காக ஏக்கர் ஒன்றிற்கு ரூபா 2000 வீதம் ஐந்து ஏக்கருக்கும் 10000 வழங்கப்பட்டது.

நான்காம் ஆண்டு குறிப்பிட்ட இப் பயனாளிகளின் குடும்பம் சுயபொருளாதாரம், தற்சார்பு நிலையை எய்தியிருக்கக் கூடிய எதிர்பார்ப்புடன் மொத்தமாக 5000ரூபா கொடுப்பனவாக வழங்கப்படும்.இத்துடன் இத்திட்டத்திற்கான நிதி வழங்கல் செயற்பாடுகள் நிறுத்தப்படும்.

ஐந்தாவது வருட முடிவில் இத்திட்டத்தின் இறுதிஅறிக்கை வெளியிடப்படும் அத்துடன் குறிப்பிட்ட இப் பயனாளிகள் இத்திட்டத்தின் நிதி முகவர்களுடன் இணைந்து பாதுகாவலராகப் பணியாற்றுவர் இவ்வாறு ஐந்து தொடக்கம் பத்து வருடம் வரையும் இத்திட்டத்தில் மேற்கொள்ளப்படும் மேலதிக வேலைகட்டு இவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்பட்டு உரிய வேதனமும் வழங்கப்படும்.

இக்கிராமத்தில் தெரிவு செய்யப்பட்ட பயனாளிகள் விபரம்:-

திரு.சு.செல்வராசா, திரு.வை.தெய்வேந்திரம், திரு.தெ.உதயகுமார், திரு.ஆ.செபமாலை திரு. கு.சந்திரமோகன். திரு.கோ. விமலானந்தன், திரு. நா. ஜெகநாதன், திரு.ச.யூ. ஜெராட்,திருமதி. பெ.திரேசம்மா, திரு.அ.யோகேஸ்வரன்.

இப்பயனாளிகள் யாவரும் கிளிநொச்சியை வதிவிடமாகக் கொண்டவர்கள் தற்சமயம் இடப்பெயர்வின் பின் இங்கு குடியேறியவர்களே இவர்கள் தாம் பெற்ற பொறுப்பினை மிகவும் உணர்வுடன் ஏற்று தமது பங்களிப்பை நல்கியமை குறிப்பிடத்தக்கது. அத்துடன் இவர்கள் இத்திட்டம் முடியும் வரை தமது பங்களிப்பை நல்குவதாகவும் உத்தரவாதம் அளித்தமையானது இத்திட்டத்தில் அவர்களின் ஆர்வத்தை வெளிப்படுத்துவதாக உள்ளது..

-வனவளப் பாதுகாப்புப் பிரிவு
கிளிநொச்சி மாவட்டம்

# விளக்கமறியல் தீர்ப்பளிக்கப்பட்ட கைதி தற்கொலைக்கு முயற்சி

(யாழ்ப்பாணம்)

விளக்கமறியலில் வைக்குமாறு தீர்ப்பளிக்கப்பட்ட கைதி ஒருவர் நீதி மன்றத்தில் வைத்தே தற்கொலை முயற்சியில் ஈடுபட்டார்.

நேற்று முன்தினம் யாழ். நீதிமன்றில் நடைபெற்ற இப்பரபரப்பு சம்பவம் பற்றி தெரிய வருவதாவது,

பெண் ஒருவருடனான காதல் விவகாரம் சம்பந்தமாக மேலதிக நீதவான் ஸ்ரீநிதி நந்தசேகரம் முன்நிலையில் ஆஜர் படுத்தப்பட்ட கோவில் வீதி யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த அ.ஜெயக்குமார் என்பவரை மேலதிக விசாரணைகளுக்காக அடுத்த மாதம் 2ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டதைத் தொடர்ந்து சிறைச்சாலைக்கு செல்ல மறுத்த பிரஸ்தாப கைதி தனது சட்டைப் பையில் இருந்த ஒருவகைத் திரவத்தை பருகினார்.

இதனை அடுத்து இவரை யாழ். போதனா வைத்தியசாலைக்கு எடுத்துச் சென்று வைத்திய சோதனைகள் மேற்கொள்ளப்பட்ட போது இவர் அருந்தியது ஒட்டுப்பசை (பைண்டர்கம்)என இனங் காணப்பட்டது.

இது தொடர்பாக கருத்துத் தெரிவித்த மேலதிக நீதவான் ஸ்ரீநிதிநந்தசேகரம் நேற்று கைதி நடந்து கொண்ட விதம் எம்மை மிரட்டுவதற்காக அவர் நடத்திய நாடகம் என்ற அவர் இச்செயல் நீதி மன்றத்தை அவமதிக்கும் செயல் எனக் குற்றம் சாட்டினார். (33)

### –கஷ்டப் பிரதேசக் கொடுப்பனவு கோரி–

# சிதம்பரபுரம் ஆசிரியர்கள் சுகயீன லீவுப் போராட்டம்!

(வவுனியா செய்தியாளர்)

கஷ்டப் பிரதேசக் கொடுப்பனவு வழங்குமாறு கோரி சிதம்பரபுரம் ஸ்ரீநாகராஜா வித்தியாலய ஆசிரியர்கள் சுகயீன லீவுப் போராட்டத்தை ஆரம்பித்துள்ளனர்.

வவுனியா நகரில் இருந்து பதினைந்து கிலோ மீற்றர் தொலைவில் உள்ள சிதம்பரபுரம் ஸ்ரீநாகராஜா வித்தியாலயத்தினை கல்வி அமைச்சு அதி கஷ்டப் பிரதேசப் பாடசாலையாகத் தற்போது அறிவித்துள்ளது. 1995ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இப்பாடசாலையில் கல்வி கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு இதுவரை கஷ்டப் பிரதேசக் கொடுப்பனவு வழங்கப்படவில்லை. தமக்கு உரிய கஷ்டப் பிரதேச கொடுப்பனவினை வழங்குமாறு இப்பாடசாலை ஆசிரியர்கள் பல தடவை வவுனியா தெற்கு வலயக் கல்விப் பணிப்பாளரையும் மாகாணக் கல்விப் பணிப்பாளரையும் கோரியும் இதுவரையும் சாதகமான பதில் கிடைக்காமையினாலேயே தாம் திங்கள் முதல் சுகயீன லீவுப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளதாக உப அதிபர் திரு. விஜயகாந் அவர்கள் தெரிவித்துள்ளார்.

தமது ஆசிரியர்களின் நியாயமான கோரிக்கைக்கு உரிய தீர்வு கிடைக்கும் வரை இச்சுகயீன லீவுப் போராட்டம் தொடரும் எனவும், இதில் 30 நிரந்தர ஆசிரியர்கள் ஈடுபட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (10)

# படையினர் கைவிட்ட பிரதேசமாயினும் மிதிவெடியகற்ற அனுமதி பெற வேண்டும்

### -மிதிவெடியகற்றும் அமைப்பீடம் படையினர் வலியுறுத்து

படையினரால் கைவிடப்பட்ட பிரதேசமாக இருந்தாலும் அவற்றில் புதைக்கப்பட்டிருக்கும் மிதிவெடிகளைஅகற்றுவதாயின் அது தொடர்பாகப் படையினரிடம் அனுமதி பெற வேண்டும்.

இவ்வாறு யாழ்.மாவட்ட மிதிவெடிகள் செயற்பாட்டுக் குழுவிடம் படையினர் வலியுறுத்தியுள்ளனர்.

மிதிவெடி அகற்றுதல் சம்பந்தமான விடயத்தில் படையினர் காட்டிவரும் விரோதப் போக்குகள் மக்களின் மீள்குடியமர்வு, விவசாயம் என்பவற்றைப் பாதிப்பதாகச் சுட்டிக் காட்டிப் படையினரின் இவ்வாறான நடவடிக்கைகளுக்குரிய விளக்கம் கோரிய மாவட்ட மிதிவெடிகள் செயற்பாட்டுக் குழுவிற்கே படையினர் இவ்விடயத்தை வலியுறுத்தியதுடன்,

அனுமதி பெறாது படையினரால் புதைத்து வைக்கப்பட்டிருக்கும் மிதிவெடிகளையும் அகற்ற முற்படுவோர் மீது கடுமையான நடவடிக்கைகள் எடுக்கப்படும் எனவும் தெரிவித்துள்ளனர். (33)

# விவசாயிகளுக்கு வந்த உதவு பொருட்கள் படையினரின் இழுத்தடிப்பால் திரும்பின

(யாழ்ப்பாணம்)

இராணுவத்தின் இழுத்தடிப்பு நடவடிக்கையால் தென்மராட்சி தெற்குப் பிரதேச மறுவன்புலோ, தனங்கிளப்பு ஆகிய பகுதிகளைச் சேர்ந்த விவசாயிகளுக்கு என அனுப்பப்பட்ட பல இலட்ச ரூபா பெறுமதியான விவசாய உதவு பொருட்கள் திரும்பிச் சென்றுள்ளதாகத் தென்மராட்சி தெற்கு விவசாய சம்மேளன வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

தென்மராட்சி தெற்கு மறுவன்புலோ மற்றும் தனங்கிளப்பு ஆகிய பிரதேசத்தில் இராணுவ பாதுகாப்பு வலயமாகப் படையினரால் முடக்கி வைக்கப்பட்டிருக்கும் 5000 ஏக்கர் விளைநிலப்பரப்பிலிருந்து 1000 ஏக்கர் விளைநிலப் பரப்பு பெரும் போகநெற்செய்கைக்காக மக்களிடம் ஒப்படைக்கப்படும் எனப் படையினர் உறுதியளித்ததைத் தொடர்ந்து இவ்விவசாய உதவு பொருட்களை உதவும் அமைப்புக்கள் அனுப்பியிருந்தன.

ஆனால் படையினர் தாம் கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்றாது இழுத்தடிப்புச் செய்து வருவதைத் தொடர்ந்து இவ்விவசாய உதவு பொருட்கள் மீண்டும் திரும்பிச் சென்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (33)

## புனரமைப்பு

காக்கை தீவின் கடற்கரை ஓர காவலரண்களைப் புனரமைக்கும் நடவடிக்கைகளில் படையினர் ஈடுபட்டுள்ளனர்.

கடந்த இரு நாட்களாக நடைபெற்றுவரும் இந்நடவடிக்கைகளில் கைவிடப்பட்ட காவலரண்கள் முட்கம்பி வேலிகளையும் புனரமைத்து வருவதுடன் புதிய புதிய பதுங்கு குழிகளை வெட்டி அவற்றுள் மழை நீர் உட்புகாத வண்ணம் அணைகளும் இட்டு வருகின்றனர். (33)

# முருங்கனில் கைப்பற்றப்பட்ட துப்பாக்கி கொழும்பிற்கு அனுப்பிவைப்பு

(வவுனியா செய்தியாளர்)

கடந்த திங்கட்கிழமை மன்னார் முருங்கன் பகுதியில் வைத்து பொலிசாரினால் கைப்பற்றப்பட்ட ரி-56 ரகத்துப்பாக்கி கொழும்பிற்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

கடந்த திங்கள் அதிகாலை மன்னாரில் இருந்து கொழும்பு நோக்கிச் சென்று கொண்டிருந்த தனியார் பேருந்தில் துப்பாக்கி கொண்டு செல்லப்படுவதாக முருங்கன் பொலிசாருக்குக் கிடைத்த இரகசியத் தகவலை அடுத்து குறிப்பிட்ட பேருந்தை முருங்கன் பகுதியில் வழிமறித்த பொலிசார், அதனைச் சோதனையிட்டபோது அதில் இருந்த உரப்பையினுள் பாகங்களாக்கப்பட்ட நிலையில் ரி-56 ரகத் துப்பாக்கியினைக் கண்டு பிடித்தனர். இதனை எடுத்துச் சென்றதாகச் சந்தேகிக்கப்படும் முஸ்லிம் பொது மகன் ஒருவரையும் பொலிசார் கைது செய்தனர்.

கைப்பற்றப்பட்ட துப்பாக்கியினை முருங்கன் பொலிசார் பரிசோதித்த போது அதன் இலக்கம் அழிக்கப்பட்டு அதன்மேல் சாயம் பூசப்பட்டு இருப்பதனை அவதானித்தனர். இதனைத்தொடர்ந்து இத்துப்பாக்கி தொடர்பான மேலதிக தகவல்களைப் பெறுவதற்காக இதனை முருங்கன் பொலிசார் கொழும்பில் அமைந்துள்ள இராணுவ ஆயுத விநியோக மையத்திற்கு அனுப்பி வைத்துள்ளனர். (10)

# ஈருருளி கைமாறி எடுத்துச் செல்லப்பட்டது

(அலுவலக செய்தியாளர்)

கடந்த வெள்ளியன்று கரைச்சிப் பிரதேச செயலகத்தில் வைத்து லுமாலா பெண்கள் ஈருருளியொன்று தவறுதலாக எடுத்துச் செல்லப்பட்டுள்ளது.

அன்றைய தினம் மேற்படி செயலக வளாகத்தில் லுமாலா பெண்கள் ஈருருளி இல.57171232 கைவிடப்பட்ட நிலையில் கண்டெடுக்கப்பட்டுள்ளது.

தவறுதலாக எடுத்துச் செல்லப்பட்டுள்ள லுமாலா ஈருருளியின் இல.5717073 என்பதாகும். எனவே மேற்படி ஈருருளியினை கைமாறி எடுத்துச் சென்றவர்கள் பிரதேச செயலகத்தில் கொண்டு வந்து ஒப்படைத்து தங்களது ஈருருளியினை பெற்றுச் செல்லும் வண்ணம் கரைச்சிப் பிரதேச செயலர் பொன் நித்தியானந்தன் வேண்டியுள்ளார். (சோ)

# ஆசிரியர்களின் பிரச்சினைகள் கல்வி அமைச்சு கோருகிறது

(வவுனியா செய்தியாளர்)

ஆசிரியர்கள் கடமையின்போது எதிர்நோக்கும் பிரச்சினைகளைக் கல்வி அமைச்சு கோரியுள்ளது.

இலங்கை ஆசிரியர் சேவையில் உள்ளபலஆசிரியர்கள் தமது கடமையினைச் சரிவரச் செய்ய முடியாதுஉள்ளதாககல்வி அமைச்சுக்கு முறையிட்டதனைத் தொடர்ந்து கல்வி அமைச்சில் ஆசிரியர்களின் நலன்பேணும் புதிய பிரிவு ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இதனை அடுத்தே கல்வி அமைச்சு சகல பாடசாலைகளிலும் கற்பிக்கும் ஆசிரியர்கள் கடமையின்போது எதிர்நோக்கும் பிரச்சினைகள், பதவி உயர்வுகளில் உள்ள பிரச்சினைகள், உயர் அதிகாரிகளினால் பழிவாங்கப்பட்டமை போன்ற பிரச்சினைகளைப் பாடசாலை ரீதியாக ஒவ்வொரு ஆசிரியரும் குறிப்பிட்டு அனுப்புமாறு கோரியுள்ளது.

பாடசாலை ஆசிரியர்கள் தமது பெயர், நிரந்தர முகவரி, தொழிற்தகைமை, ஆசிரிய சேவையின் தரம், எதிர்நோக்கும் பிரச்சினைகள் என்பவற்றை ஒரே பார்வையில் குறிப்பிட்டு பாடசாலை ரீதியாக கல்வி அமைச்சிற்கு அனுப்பி வைக்குமாறு கோரப்பட்டுள்ளனர். (10)

# வாகனங்களைச் சோதனையிடும் இராணுவப் பொலிசார்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் திடீர் திடீரென இராணுவப் பொலிசார் வாகனங்களைச் சோதனையிட்டு வருகின்றனர்.

நேற்று முன்தினம் யாழ். நகரில் முட்டாஸ் கடைச் சந்தி பிரதான வீதியில் பஸ்ரியன் சந்தி, சுண்டுக்குழி சந்தி ஆகியவற்றில் திடீரென வந்து இறங்கிய இராணுவப் பொலிசாரால் அவ்வழியால் வந்த வாகனங்கள் அனைத்தும் மறிக்கப்பட்டு சாரதி அனுமதிப்பத்திரம், வரி அட்டை, காப்புறுதி போன்றவற்றைப் பரிசோதித்தனர். (33)

# யாழ். மாநகர சபைக்கு ஒதுக்கப்பட்ட நிதி பூரணமாகப் பயன்படுத்தவில்லை

### முன்னாள் உறுப்பினர்கள் குற்றச்சாட்டு

(யாழ்ப்பாணம்)

யாழ். நகரின் அபிவிருத்திப் பணிகளுக்காக யாழ். மாநகர சபைக்கு வழங்கப்பட்ட நிதி உதவி பூரணமாகப் பயன்படுத்தப்படவில்லை என யாழ். மாநகர சபையின் முன்னாள் உறுப்பினர்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.

இவ் ஆண்டில் யாழ். மாநகர சபை எல்லைக்குட்பட்ட பகுதிகளை அபிவிருத்தி செய்வதற்காக திறைசேரியினால் அனுப்பிவைக்கப்பட்ட 4.2 மில்லியன் ரூபாவை பயன்படுத்தி எந்தவித அபிவிருத்திகளும் நிறைவேற்றப்படவில்லை எனக் குற்றம் சாட்டும் யாழ். மாநகர சபையின் முன்னாள் உறுப்பினர்கள் 21 பேரும் இது சம்பந்தமான விளக்கத்தைத் தருமாறு யாழ். மாநகர சபை ஆணையாளர் இ. இராமலிங்கத்திடம் கோரிக்கை விடுத்துள்ளனர். (33)

## செயற்திட்டக் கூட்டம்

கிளிநொச்சி கரைச்சிப் பிரதேச 2004ஆம் ஆண்டிற்கான செயற்றிட்டக் கூட்டம் இன்று காலை 10.00 மணிக்கு கரைச்சிப் பிரதேச செயலக மண்டபத்தில் பிரதேச செயலர் பொன் நித்தியானந்தன் தலைமையில் இடம்பெறவுள்ளதால் திணைக்கள அதிகாரிகள், நிறுவனத் தலைவர்கள் திட்ட வரைவுகளுடன் கூட்டத்திற்கு சமுகமளிக்கும் வண்ணம் பிரதேச செயலர் வேண்டியுள்ளார். (சோ)

# மட்டு. வில் கண்ணிவெடி அகற்றும் பயிற்சிநெறி ஆரம்பமாகியது

(அலுவலக செய்தியாளர்)

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள மக்களின் நலனைக் கருத்திற் கொண்டு தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் அனுசரணையுடன் மனித நேயக் கண்ணிவெடி அகற்றும் பிரிவு (MAG) கண்ணிவெடி அகற்றும் இளைஞர்களுக்கான வதிவிடப் பயிற்சிப் பட்டறை ஒன்றை முதல் முதலாக மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள நாவலடி மீனவர் பயிற்சிக்கல்லூரியில் அண்மையில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.



நாவலடி மீனவர் பயிற்சிக் கல்லூரியில் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் மட்டக்களப்பு பணிப்பாளர் தலைமையில் இப்பயிற்சிப் பட்டறை ஆரம்பமானது.

தலைமையுரையினை த.பு.கழக மாவட்டப் பணிப்பாளர் குரு.தேவராஜா ஆற்றினார். அவர் தனதுரையில் யுத்தத்தினால் பாதிக்கப்பட்டு பல்வேறு யுத்தஇன்னல்களுக்கு முகம் கொடுத்துக் கொண்டிருந்த மக்களுக்கு அச்சத்திலிருந்து விடிவைப் பெறுவதற்கும், மனித உயிர்களுக்கு உறுதியையும், பாதுகாப்பினையும் வழங்குவதற்காகவும் இத்திட்டம் மிகவும் அவசியமானது எனவும் இது எமது மக்களுக்கு ஏற்படுத்திக் கொடுக்கப்பட்ட பாரிய வேலைத்திட்டமாகும் எனவும், மனிதாபிமானத்திற்கு மதிப்பளிக்கும் நாம் எமது மாவட்டத்தினைப் பாதுகாக்கும் பணியில் ஈடுபட்டுள்ளோம் எனவும் கூறித் தனது உரையினை முடித்து வைத்தார்.

இவ் முதல் நிகழ்வின் மட்டக்களப்பு மாவட்ட தமிழர் புனர்வாழ்வுக் கழகப் பணிப்பாளரினால் மங்கல விளக்கின் முதல் சுடர் ஏற்றிவைக்கப்பட்டது, அதனைத் தொடர்ந்து மெக் நிறுவனத்தின் பிரதிநிதிகளான டானியல், திரேசா, மீனவர் பயிற்சிக் கல்லூரி அதிபர் ஆகியோராலும் சுடர்கள் ஏற்றிவைக்கப்பட்டன.

தொடர்ந்து மக் (M.A.G) நிறுவனத்தின் தொழில்நுட்ப ஆலோசகர் டானியல் அவர்கள் பேசும் போது இக் கண்ணிவெடி அகற்றும் பயிற்சியில் ஈடுபட்டுள்ள 49 இளைஞர்களும் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டு அவர்களின் பயிற்சியினை ஆரம்பித்ததுடன், அவர்கள் இப் பயிற்சியினை முடிப்பதற்கு சகல வசதிகளையும் தம்மால் வழங்கி வைக்கப்படும் எனவும் பயிற்சி முடிவுற்றதும் இளைஞர்களுடன் சேர்ந்து தொழிற்படப் போவதாகவும் உறுதியளித்தார். அத்துடன் பயிற்சி முடிவுற்றதும் மாவட்டத்தில் அடையாளம் காணப்பட்ட 38 கிராமங்களில் வவுணதீவு, பெரியபுல்லுமலை, வலையிறவு போன்ற இடங்களில் முதற் தடவையாக திட்டம் ஆரம்பமாகவுள்ளதாகவும் கூறினார்.

இந்நிகழ்வில் மெக்நிறுவன சமுதாய இணைப்பு ஆலோசகர் செல்வி திரேசா, தொழில்நுட்ப ஆலோசகரின் செயலாளர் தவராஜதீபன் ஆகி யோரும் கலந்து கொண்டனர். (சோ)

# புதுமுறிப்பு விக்னேஸ்வரா கட்டடத்தொகுதி திறப்பு

(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சி புதுமுறிப்பு விக்னேஸ்வரா வித்தியாலய கட்டடத் தொகுதி திறப்பு விழா நேற்றுக் காலை 10.30மணிக்கு வித்தியாலய முதல்வர் சிவனொளிபாதம் தலைமையில் நடைபெற்றது.

மேற்படி நிகழ்வுக்கு வருகை தந்த விருந்தினர்களை வித்தியாலய வாயிலில் வைத்து வித்தியாலய மாணவர்கள் மாலை அணிவித்து மண்டபத்திற்கு அழைத்துச் சென்றனர்.

ஆரம்ப நிகழ்வாக கிளி.வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் ம.க.பத்மநாதன், கரைச்சிப் பிரதேசச் செயலர் பொன் நித்தியானந்தன், போரூட் நிறுவனத்தைச் சேர்ந்த கமலநாதன், கிளி.மாவட்ட செயலக தொழில்நுட்ப



உத்தியோகத்தர் தயாபரசிவம், ஆகியோர் மங்கல விளக்கேற்றி வைத்தனர். அடுத்து தமிழீழத் தேசியக் கொடியினை கிளி.மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் நிருபன் ஏற்றிவைக்க, த.பு.க. கொடியினை கழக கிளி.மாவட்ட பணிப்பாளர் ஜெகாவும், வித்தியாலயக் கொடியினை வித்தியாலய அதிபரும் ஏற்றி வைத்தனர். தொடர்ந்து கட்டடத் தொகுதி ஒவ்வொன்றினையும் முறையே தமிழீழ மாணவர் அமைப்புப் பொறுப்பாளர் ராணிமைந்தன், யு.என்.எச்.சி.ஆர் பிரதிநிதி கெனேகோ, வன்னிவலய தமிழீழக் கல்விக் கழகப் பொறுப்பாளர் ஞானம், கிளி. வலயக் கல்விப் பணிப்பாளர் ப.அரியரத்தினம், போரூட் பிரதிநிதி ஆனே ஆகியோர் சம்பிரதாய பூர்வமாக நாடாவினை வெட்டித் திறந்து வைத்தனர்.

மேற்படி நிகழ்வில் போரூட் நிறுவன சமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் சாந்தலிங்கம், த.பு.க அக்கராயன் பிரதேச இணைப்பாளர் நல்லையா மற்றும் பாடசாலை அபிவிருத்திச் சங்க உறுப்பினர்கள் கலந்து நிகழ்வினைச் சிறப்பித்தனர்.

மேற்படி கட்டடத்தொகுதி யு.என்.எச்.சி.ஆர் நிதி யுதவியுடன், போரூட் நிறுவன கருத்திட்டத்தினூடாக, தமிழர் புனர் வாழ்வுக் கழகத்தின் அனுசரணையுடன் அகதிகள் புனர்வாழ்வுக் கழகத்தினரால் அமைக்கப்பெற்றமை குறிப்பிடத்தக்கது. (சோ)

# அராலி துர்க்கையம்மன் ஆலயத்தை மக்களிடம் ஒப்படைக்குக

## யாழ். இராணுவத் தலைமையகத்திற்கு கடிதம்

அராலி தெற்கில் படையினரால் ஆக்கிரமித்து வைக்கப்பட்டுள்ள ஸ்ரீதுர்க்கையம்மன் ஆலயத்தை மக்கள் பாவனைக்கு விடுமாறு யாழ். இராணுவத் தலைமையகத்திடம் அவ்ஆலயநிர்வாகத்தினர் கோரிக்கை விடுத்துள்ளனர்.

1995இல்இருந்து இராணுவத்தின் அதி உயர் பாதுகாப்பு வலயம் எனும் பெயரில் தடுத்து வைக்கப்பட்டிருந்தது.அத்துடன் இவ்வாலயம் யுத்தம் காரணமாக தற்போது சேதமடைந்துள்ளதுடன், ஆலயத்திலுள்ள பொருட்களும் களவாடப்பட்டுள்ளன. எனவே இவ் ஆலயத்தை மக்கள் பாவனைக்கு ஏற்ற வகையில் விடுமாறு தென்மராட்சி படைத்தளபதி டயஸ் ஊடாக யாழ். மாவட்ட இராணுவத்தளபதி தலைமையகத்திற்குப் பொது மக்கள், ஆலய நிர்வாகத்தினர் கடிதம் ஒன்றை அனுப்பியிருந்தனர்.

இதேவேளை இவ் ஆலய வருடாந்த மகோற்சவம் 2004ஆம் ஆண்டு தை மாதம் நடைபெற வேண்டும் என்பதும் குறிப்பிடத்தக்கது. (33)

- கச்சாய்ப் பகுதியில் -

# புதிய தொழில் உபகரணங்களுக்கு கடற்படை கட்டுப்பாடு விதிப்பு

(யாழ்ப்பாணம்)

கச்சாய்ப் பகுதிக்கு சமீபமாக புதிய மீன்பிடி உபகரணங்களை எடுத்துச் செல்வதற்குக் கடற் படையினர் தற்போது அனுமதி வழங்கியுள்ளார்கள்.

எனினும் மீன்பிடி உபகரணங்கள் அனைத்தும் படையினரின் அனுமதியுடனேயே எடுத்துச் செல்ல வேண்டும் என வலியுறுத்தப்பட்டுள்ளது.

இதன்படி கடற் படையினரின் அனுமதிச் சீட்டுப் பெற்ற பின்னரே புதிய மீன்பிடி உபகரணங்களை எடுத்து வர கடந்த 15ஆம் திகதி முதல் அனுமதி வழங்கியுள்ளார்கள். அனுமதிச் சீட்டுப் பெறாது மீன் பிடி உபகரணங்களைப் பறிமுதல் செய்யப்படும் என்றும் கூறியுள்ளனர்.

மேற்படி பகுதியில் வாழும் மீனவர்கள் ஆழ்கடலுக்குச் சென்று மீன் பிடிக்க படையினர் அனுமதியளித்திருந்த போதும் புதிய மீன்பிடி உபகரணங்களை எடுத்துவர அனுமதி மறுத்திருந்தனர்.

இதனைக் கண்டித்து அப்பகுதி மக்கள் தென்மராட்சிப் பகுதியின் கடற்படைத் தளபதிக்குக் கடிதம் ஒன்றை அண்மையில் கையளித்திருந்தனர்.இதனையடுத்தே கடற்படையினர் புதிய நடைமுறையைக் கடந்த கடந்த 15ஆம் திகதி அறிமுகப் படுத்தியுள்ளனர். (33)

# ஜெயபுரம் வர்த்தகர்களுக்கு காவல்துறையால் கருத்தரங்கு

ஜெயபுரம் வர்த்தகர்களுக்கு நாச்சிக்குடாக் காவல்துறையினரால் கருத்தரங்கு ஒன்று நேற்று முன்தினம் நடத்தப்பட்டது. நாச்சிக்குடாக் காவல் பணிமனைப் பொறுப்பாளர் நா.வதனகுமார் தலைமையில் இக்கருத்தரங்கு நடத்தப்பட்டது.

குற்றம் நடைபெறாமல் தடுப்பது எப்படி? உடமைகளை எவ்வாறு பாதுகாப்பது? போக்குவரத்து விபத்துக்களைத் தவிர்ப்பது எப்படி? என்பது பற்றிய கருத்துக்கள் இக்கருத்தரங்கில் காவல்ப்பணிமனைப் பொறுப்பாளரால் வழங்கப்பட்டது.

# சர்வமதத் தலைவர்கள் யாழ்ப்பாணம் விஜயம்

(வவுனியா செய்தியாளர்)

சர்வமதத் தலைவர்கள் அடங்கிய குழுஒன்று யாழ்ப்பாணத்திற்கு நாளை விஜயம் செய்யவுள்ளது.

இலங்கையில் ஏற்பட்டுள்ள அரசியல் ஸ்திரமற்ற நிலையில் யாழ்ப்பாணத்தில் உள்ள உயர் பாதுகாப்பு வலயங்களின் தற்போதைய நிலைமையினைப் பார்வையிடுவதற்காக தென்பகுதி சர்வமதத் தலைவர்கள் அடங்கிய குழு ஒன்று நாளை கொழும்பில் இருந்து புறப் பட்டு யாழ்ப்பாணம் சென்றடையவுள் ளது.

யாழ்ப்பாணம் செல்லும் இக்குழுவினர் வெள்ளிக்கிழமை யாழ்ப்பாணத்தில் உள்ள உயர் பாதுகாப்பு வலயப் பிரதேசங்களுக்கு, விஜயம் செய்து நிலைமைகளைப் பார்வையிட்ட பின் யாழ்ப்பாண நிலவரம் தொடர்பாகப் பல்வேறு தரப்பினருடனும் கலந்துரையாடவுள்ளனர். (10)

# கண்டெடுப்பு

தாமோதரம் பரமேஸ்வரி என்பவரது அடையாள அட்டை (565573683 V) அடங்கிய கைப்பை ஒன்று நேற்று கிளிநொச்சி ஜெயந்திநகர்ப் பகுதியில் கண்டெடுக்கப்பட்டு ஈழநாதம் பணிமனையில் ஒப்படைக்கப் பட்டுள்ளது; உரியவர் கிளி. ஈழநாதம் பணிமனையில் பெற்றுக்கொள்ளலாம்.

# 45ஆம் நாள் நீங்கா நினைவலைகள்

மலர்வு — உதிர்வு

07 07 01 1977 — 07 10 2003



அமரர்

## மாசிலாமணி சிறிகாந்தன் (காந்தன்)

குமரபுரம், பரந்தன்.

காலத்தின் கட்டளையோ கயவனவன் சிந்தனையோ
காந்தா நீ எமைப்பிரிந்து கடந்ததையா 45 நாட்கள்
இல்லறத்தில் இணையுமுன்னே எமை விட்டு சென்றாயோ
இன்பதுன்பம் போதுமென்று இளைப்பாற போனாயோ
ஆலமரமாக அன்பான விழுதுகளை படரவிட்டாயோ
ஆழ்கடல் தோணியைப்போல் அலைகின்றோம் பாராயோ
மூலமரம் சரிந்ததுவோ முழுமதியும் மறைந்ததுவோ
எண்ணமதில் நீயிருப்பாய் இனிய உயிர் சாந்திபெற
எம் இதய அஞ்சலிகள் விழிநிறைய பெருமழைகள்.

நீங்காத நினைவுடன்,
மாமா,மாமி,
மச்சாள், மச்சான்மார்.

புனிதபூமி,
வள்ளிபுனம்,
புதுக்குடியிருப்பு.

(3882)



## சிந்தனைக்கு

ஆக்கிரமிப்பாளர்களின் சுவடுகளை இந்த மண் ஒருபொழுதும் சுமந்துகொள்ளாது என்பதை எதிரிக்கு நாம் நன்கு உணர்த்தி வருகின்றோம்.

தமிழீழத்தேசியத் தலைவர்.

ஈழநாதம்
EELANATHAM மக்கள் நாளிதழ்
யாழ். சாலை, கிளிநொச்சி. 20-11-2003

# தேர்தலா? தேசிய அரசா?

சிறிலங்காவில் தற்போது ஏற்பட்டுள்ள அரசியல் நெருக்கடிக்குத் தீர்வாக பாராளுமன்றம் கலைக்கப்படுமா? அன்றி தேசிய அரசாங்கம் ஒன்று அமைக்கப்படுமா? என்பது குறித்து ஆய்வாளர்கள் மத்தியில் பலமான வாதப்பிரதிவாதங்கள் நடந்து கொண்டிருக்கின்றன. ஏனெனில் தற்போதைய நிலையிலேயே சிறிலங்கா அரசு தொடர்ந்தும் செயற்படமுடியாததொரு நிலை தோன்றியுள்ளது என்பதை எவருமே நிராகரிக்க முடியாதுள்ளது.

பாதுகாப்பு அமைச்சு உட்பட மூன்று அமைச்சுக்களை சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க ஐ.தே.முன்னணி அரசாங்கத்திடம் இருந்து பறித்தெடுத்ததைத் தொடர்ந்து உச்ச நிலை அடைந்த நெருக்கடியானது கடந்த வாரத்தில் சனாதிபதி-பிரதமர் இருவரும் இரு தடவைகள் சந்தித்துப் பேசிய பின்னர் சற்றுத் தணிவடைந்துள்ளது போல் தெரிகின்றது. ஆனால் அதற்காக விவகாரம் முற்றுப் பெற்று விட்டது என எண்ணுவதற்கில்லை.

அமைச்சுக்களைப் பொறுப்பேற்று பாராளுமன்றத்தினையும் சனாதிபதி ஒத்தி வைத்த போது ஆட்சிமாற்றம் அல்லது ஆட்சிக் கவிழ்ப்பு என்பதற்கான வாய்ப்புக்கள் அதிகரித்துள்ளதாகவும் அடுத்த பொதுத் தேர்தல் நடைபெறுவது தவிர்க்க முடியாதது என்பது போன்றதொரு நிலையுமே காணப்பட்டது.ஆனால் தற்பொழுது அச்சூழ்நிலையில் சற்று மாற்றம் அவதானிக்கக் கூடியதாக உள்ளது.

இவ்வாறு மாற்றம் ஏற்பட்டமைக்கு ஆளும் கட்சியிலும் எதிர்க் கட்சியிலும் உள்ள பெரும்பான்மை பாராளுமன்ற உறுப்பினர்கள் பொதுத் தேர்தல் ஒன்றை விரும்பாமையே காரணம் ஆகும். சனாதிபதி சந்திரிகா கூட ஆட்சிக் கவிழ்விற்கு திட்டமிட்டபோது ஐ.தே.முன்னணியில் இருந்து சில பாராளுமன்ற உறுப்பினர்களைத் தம்முடன் இணைத்துக் கொள்வதன் மூலம் புதிய அரசாங்கத்தை அமைக்கலாம் என்றே கருதினார்.

ஆகையினால் பொதுத் தேர்தல் ஒன்று குறித்து சந்திரிகா குமாரதுங்க கூட ஆரம்பம் முதலே அக்கறை கொண்டிருக்கவில்லை என்றே கூறலாம். ஏனெனில் பொதுத் தேர்தலானது பொ.ஐ.முன்னணிக்கோ தமக்கோ, நன்மை பயக்கத்தக்கதாக இருக்கமாட்டாது என்பதை அவர் புரிந்துகொண்டிருக்க முடியும். இதேபோன்றே ஐ.தே.முன்னணி உறுப்பினர்களிலும் பெரும்பான்மையானோர் பொதுத் தேர்தலுக்குச் செல்ல விருப்பம் கொண்டிருக்கவில்லை. அத்தோடு ஐ.தே.முன்னணி தேர்தல் ஒன்றை எதிர்கொண்டு வெற்றி பெற்றாலும் கூடக் கிடைக்கப்பெறும் பாராளுமன்ற ஆசனங்களில் பெரும் மாற்றம் கிட்டுவதற்கு வாய்ப்பில்லை என்பது ரணில் விக்கிரமசிங்கவிற்குத் தெரியும். இந்நிலையில் தேர்தல் ஒன்று நடத்துவதானது நாட்டிற்கோ,தமக்கோ எந்தவகையிலும் பயனளிக்கமாட்டாது என்பதினால் தேர்தல் குறித்து அவர்கள் பெருமளவில் அக்கறையை வெளிப்படுத்தவில்லை.

இதேவேளை தேர்தல் நடத்தப்பட வேண்டும் என்ற நிலைப்பாட்டை வலியுறுத்தி வரும் கட்சியாக ஜே.வி.பி மட்டுமே உள்ளது. ஜே.வி.பி.யின் இந்நிலைப்பாட்டிற்குப் பொ. ஐ. முன்னணியுடன் கூட்டுச் சேர்ந்து போட்டியிடும் இடத்துத் தற்போதைய நிலமையை விடத் தமது அரசியல் செல்வாக்கு குறிப்பாகத் தமது பாராளுமன்ற ஆசனங்கள் அதிகரிப்பிற்கான வாய்ப்பு அதிகம் உண்டென்பது அதன் மதிப்பீடாகும்.

ஆனால், சனாதிபதியும் பிரதமரும் தற்போது மேற்கொண்டு வரும் சந்திப்புக்கள், பேச்சுவார்த்தைகள் பாராளுமன்றத்தை உடன் கலைத்துத் தேர்தல் ஒன்றை நடத்தும் யோசனை அவர்களுக்கு இல்லை என்பதையே வெளிப்படுத்துவது போன்றே உள்ளது. இதேவேளை, சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க முன்வைத்துள்ள தேசிய அரசுத் திட்டத்தினை பரிசீலிக்கவும், அதிகாரங்களைப் பங்கிட்டுக்கொள்வது தொடர்பானதொரு நிலைக்கு வருவது குறித்து பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் ஆலோசிப்பது போலுள்ளது. ஆனால், தேசிய அரசு குறித்த ஆலோசனை பரிசீலிக்கப்படும் முன்பாகப் பறிக்கப்பட்ட மூன்று அமைச்சுக்கள் தொடர்பாக ஓர் முடிவிற்கு வருதல் வேண்டும் எனப் பிரதமர் ரணில் அக்கறை காட்டிவருகிறார். அதாவது இந்த மூன்று அமைச்சுக்களையும் பெற்றுக்கொள்ளாது தேசிய அரசு குறித்துப் பேச முற்படுவதானது தமது நிலையைப் பலவீனப்படுத்துவதாகிவிடும் என்பது அவரது நிலைப்பாடாகவுள்ளது.

ஆனால் தற்போதைய அரசியல் நிகழ்வுகள் மேற்கூறப்பட்டவாறான மதிப்பீடுகளுக்கு காரணமாகியிருப்பினும் சனாதிபதி சந்திரிகாவின் நிலைப்பாடே இறுதியான தீர்மானமாகப் பெரும்பாலும் அமைதல் கூடும், ஆகையினால் அடுத்த பொதுத் தேர்தலா? தேசிய அரசாங்கமா? என்பது குறித்த தீர்மானத்தை அவர் எடுக்கும் முடிவுகளே தீர்மானிக்க வல்லவையாக இருக்கும். இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் நோக்கில் ஐ.தே.முன்னணியைத் தேசிய அரசாங்கம் குறித்துப் பேச அழைக்கும் சனாதிபதி சந்திரிகா, இனப்பிரச்சினைக்கு இராணுவத் தீர்வை வலியுறுத்துவதோடு, பாராளுமன்றத்தைக் கலைத்துப் பொதுத் தேர்தல் நடத்தக்கோரும் ஜே.வி.பி.யுடன் உடன்பாடு ஒன்று செய்துகொள்ள முற்பட்டு நிற்பதானது எதிர்காலம் குறித்த எதிர்வு கூறலுக்கு சிரமத்தை ஏற்படுத்துவதாயுள்ளது.

# சமாதானத்தை சனாதிபதி குழப்பினால் விளைவுக்கு அவரே பொறுப்பேற்க வேண்டும்

## -அம்பாறை மாவட்ட பா.உ.சந்திரநேரு

கடந்த பலமாதங்களாக நாட்டில் நிலவிய சமாதான நிம்மதியைக் குழப்ப ஜே.வி.பி.யும் லக்ஷ்மன் கதிர்காமரும் கங்கணம் கட்டியுள்ளனர்.அவர்களது கதைகேட்டு சமாதானத்தைச் சிதைத்தால் அதற்கான முழுப்பொறுப்பையும் சனாதிபதியே ஏற்க வேண்டும்.

இவ்வாறு காரைதீவு-கண்ணகிக் கிராமத்தில் தீபாலோக மின்விநியோக விழாவில் அம்பாறை மாவட்ட எம்.பி.அரியநாயகம் சந்திரநேரு கூறியுள்ளார்.

அவர் மேலும் கூறுகையில்,

இன்று நாட்டுமக்கள் மத்தியில் ஒருவித பீதி நிலவுகின்றது. கவலையடைந்துள்ள மக்கள் மீண்டுமொரு போர் தம்மீது திணிக்கப்படுமோ என்று அச்சமடைந்துள்ளனர். மீண்டும் சுற்றிவளைப்பு நடைபெறுமா? புலம் பெயர வேண்டுமா? என்றெல்லாம் கேட்கின்றனர்.

சனாதிபதி பல தடவைகளில் சமாதானத்தைக் குழப்ப முயற்சியெடுத்திருக்கின்றார். அவையெல்லாம் தோல்வியில் முடிவடைந்துள்ளன.

இறுதியில் புலிகள் இடைக்கால நிர்வாக நகலை ஒப்படைத்ததும், தமக்கும் தமது கட்சிக்கும் இனி மேல் அரசியல் எதிர்காலம் இல்லை என்றுணர்ந்து அமைச்சகப் பொறுப்புக்களையும் பொறுப்பேற்றுரகளையை ஏற்படுத்தியுள்ளார்.

இது இலங்கை வாழ் மக்களை மட்டுமல்ல சர்வதேச மக்களையே சந்தேகம் கொள்ள வைத்தது. சமாதானத்தை நேசிக்கும் பெரும்பாலான சிங்கள மக்களும் சனாதிபதியின் செயற்பாட்டில் அதிருப்தி கொண்டுள்ளனர்.

பல கழுகுக் கண்களுக்கு மத்தியில் அனுசரணையாளராக விளங்கிய நோர்வேயும் தற்போது தற்காலிகமாகச் சமாதான முயற்சியிலிருந்து விலகியுள்ளது.

இது சமாதான முன்னெடுப்பிற்கு வீழ்ந்துள்ள மற்றுமோர் பேரிடி இதற்கும் அடிப்படைக் காரணம் சனாதிபதி சமாதானத்திற்குத் தான் தயாரென்று பேச்சளவில் கூறி இராட்சதப் போக்கில் சர்வாதிகாரி போன்று செயற்பட்டு வருகின்றார்.

நாட்டுப் பிரச்சினைக்கு யுத்தத்தால் தீர்வு காண சனாதிபதி விரும்புகின்றாரா? என்பதை தெரியப்படுத்த வேண்டும். சமாதானம் குழம்பினால் நாடு குட்டிச்சுவராகி விடும். மற்றுமொரு எத்தியோப்பியாவாக மாறும் நிலை உருவாகும் என்றும் கூறியுள்ளார்.

# சமாதான முயற்சிகளிலிருந்து பிரதமர் விலகுவதை ஏற்க முடியாது

## ல.ச.ச.கட்சித் தலைவர் பட்டிவீரக்கோன்

பிரதமரின் சமாதானப் பேச்சு வார்த்தைகளினால் புலிகள் அதிக நன்மைகள் பெற்றுள்ளனர். இப்பொழுது தெற்கு மாகாண மக்களின் மத்தியில் சில தப்பபிப்பிராயங்கள் பரப்பப்பட்டு வருகின்ற இவ் வேளையில் பிரதமர் சமாதானப் பேச்சு வார்த்தைகளிலிருந்து விலகப் போவதாகக் கூறியுள்ளதை ஏற்க முடியாதென லங்காசமசமாஜக் கட்சித் தலைவர் பட்டிவீரக்கோன் கூறியுள்ளார். பிரதமர் அவர்கள் இரண்டு வருடகாலமும் சமாதான நடவடிக்கைகள் முன்னெடுத்து வந்தபடியால் மீண்டும் அவர் இதைப் பொறுபேற்று நடத்த வேண்டும்.

பொதுத்தேர்தல் நடந்தாலும் இந்தப் பிரச்சினைகள் தீரப்போவதில்லை. பாராளுமன்ற யாப்பை மாற்றுவதற்கு மூன்றில் இரண்டு பங்கு வாக்குகள் தேவைப்படுகின்றன. எந்தவொரு கட்சியும் இந்த நாட்டில் மூன்றில்இரண்டு பங்கைப் பெற்றுக்கொள்ள முடியாது. எனவே அவரவரின் பொறுப்புகள் முன்னெடுத்துச் செல்வது தற்பொழுது சிறந்ததொரு வழியென பட்டிவீரக்கோன் கூறியுள்ளார்.

# சனாதிபதியின் அதிரடி நடவடிக்கையால் 4 சர்வதேச வர்த்தக மாநாடுகள் ரத்து !

(கொழும்பு)

சனாதிபதியின் அதிரடி அரசியல் நடவடிக்கையினால் ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலை காரணமாக இலங்கையில் நடைபெறவிருந்த 4 சர்வதேச வர்த்தக மாநாடுகள் இரத்துச் செய்யப்பட்டுள்ளதாக வர்த்தக நுகர்வோர் விவகார அமைச்சர் ரவி கருணாநாயக்க கூறியுள்ளார்.

அத்துடன் ஆடைக் கைத்தொழிலின் முன்னேற்றம் கருதி 23 நாடுகளுடன் போட்டியிட்டுப் பெறப்பட்ட அமெரிக்காவுடனான சுதந்திர வர்த்தக உடன்படிக்கையில் இந்த அரசியல் நெருக்கடியினால் கைச்சாத்திட முடியாத நிலை காணப்படுவதாக அமைச்சர் கூறியுள்ளார்.

2005ஆம் ஆண்டு ஆடை கோட்டாமுறை நிறைவடையும் போது உலக சந்தையில் இலங்கைக்குப் போட்டியிட இருந்த ஒரே வாய்ப்பு இதுவாகும்.

இந்த உடன்படிக்கையில் கைச்சாத்திடத் தாமதமாகியுள்ளதால் இலங்கையின் ஆடைத் தொழில் துறை பெரும் இன்னல்களை எதிர்நோக்கிக் கொண்டிருக்கின்றது.

கொழும்பில் 5நட்சத்திரக் ஹோட்டல் ஒன்றை ஸ்தாபிக்கக் கடந்த வாரம் வருகை தந்திருந்த அமெரிக்க வெளிநாட்டு முதலீட்டாளர்கள் அந்த யோசனையைக் கைவிட்டு நாடு திரும்பியுள்ளார்கள் என்றும் கூறியுள்ளார்.

# பொ.ஐ.மு.வினரின் ஊர்வலம் ஐ.தே.க.வினரால் தடுத்து நிறுத்தம்

பொதுசன ஐக்கிய முன்னணியினரால் நடாத்தப்பட்ட வாகன ஊர்வலத்தை மாவத்தகம பிரதேசத்தில் வழியில் ரயர்களைப்போட்டு எரித்து ஊர்வலம் செல்ல விடாமல்.ஐ.தே.க.வினர் தடுத்தி நிறுத்தி உள்ளார்கள். மூன்று அமைச்சுக்களின் பொறுப்புக்களை சனாதிபதி ஏற்றுக் கொண்ட காரணத்தை விளக்கிக் கூறுவதற்கு இந்த ஊர்வலம் நடத்தப்பட்டது. இதற்கு எதிர்ப்புத் தெரிவித்து ஐ.தே.க.வினர் இந்த ஆர்ப்பாட்டத்தைச் செய்துள்ளனர். இதேவேளை கொழும்பில் இருந்து கண்டிக்குச் செல்வதற்காக சிறிலங்காப் பிரதமர் ரணில் அன்றைய தினம் மாவத்தகம ஊடாகப் பயணத்தை மேற்கொண்டுள்ளார்.வழியில் பொது மக்களைச் சந்தித்து அவர்களோடு சிறிது நேரம் உரையாடிச் சென்றுள்ளார்.

# அணியின் மோசமான துடுப்பாட்டமே எமது படுதோல்விக்குக் காரணம்

## - இங்கிலாந்து அணித்தலைவர் மைக்கல்வோகன்

இங்கிலாந்து கிரிக்கெட் அணி சிறிலங்கா அணியிடம் படுமோசமான தோல்வியை நேற்றுமுன்தினம் சந்தித்தமைக்கு தமது அணியின் மிக மோசமான துடுப்பாட்டமே என அணியின் தலைவர் மைக்கல் வோகன் கூறியுள்ளார்.

இங்கிலாந்து அணியின் நிலையை அணியில் பங்குபற்றிய அனைவரும் புரிந்து கொள்ளக்கூடிய நிலை ஏற்பட்டுள்ளதாக அவர் மேலும் கூறியுள்ளார்.

# ஆஸி.விக்கெட் காப்பாளர் மீது கபில்தேவ் கண்டனம்

அவுஸ்திரேலிய கிரிக்கெட் அணியின் விக்கெட் காப்பாளரை இந்திய அணியின் முன்னாள் தலைவர் கபில்தேவ் கண்டித்துள்ளார்.

அண்மையில் அவ்வணியின் விக்கெட் காப்பாளர் கில்கிறிஸ்ட், "இந்திய அணியில் சிறப்பு விக்கெட் காப்பாளர் பார்த்திவ் பட்டேல் இருக்கும் போது ராவிட்டை விக்கெட் காப்பாளராகப் பயன்படுத்துவது இந்திய அணிக்கு ஆபத்து" என்று கூறியிருந்தார்.

அதனைக் கண்டிக்கும் முகமாகக் கபில்தேவ் கருத்துத் தெரிவித்துள்ளார். அத்துடன் அவுஸ்திரேலிய அணிக்கு கில்கிறிஸ்ட் விக்கெட் காப்பாளராக இருப்பதை மாற்றி வேறொருவரை நியமிக்குமாறு கூறினால் அவர்களுக்கு எப்படி இருக்கும் எனவும் வினாவியுள்ளார். நமது அணியின் கொள்கையை வெளிநாட்டு அணியைச் சார்ந்த ஒருவர் மாற்றுமாறு கூறுவது தவறானதாகும் எனவும் கபில்தேவ் கூறியுள்ளார்.



# முப்படைத்தளபதிகள் மட்டக்களப்பிற்கு சனாதிபதியின் பணிப்பில் விஜயம்

(கொழும்பு)

பாதுகாப்பு அமைச்சை சிறிலங்கா சனாதிபதி சந்திரிகா பொறுப்பேற்றுக்கொண்ட பின்னர் நேற்று முப்படைகளின் தளபதிகள் முதல் தடவையாக மட்டக்களப்பு விஜயத்தை மேற்கொளண்டுள்ளனர்.

சனாதிபதி சந்திரிகாவின் பணிப்பின் பேரில் வடக்கு-கிழக்கு மாகாண நிலைமைகளை நேரில் ஆராய்ந்து தேவையான அறிவுறுத்தல்களை படை அதிகாரிகளுக்கு விடுப்பதற்காக இந்த விஜயத்தை மேற்கொள்டுள்ள முப்படைத் தளபதிகள் 23-03ஆம் படைப்பிரிவு தலைமையகத்தில் மட்டக்களப்பு மாவட்ட முப்படை அதிகாரிகள் விசேட அதிரடிப்படை மற்றும் பொலிஸ் அதிகாரிகள் கலந்துகொண்ட உயர்மட்ட மாநாடொன்றிலும் கலந்துகொண்டுள்ளனர்.

மட்டக்களப்பு மாவட்ட பாதுகாப்பு நிலவரம் குறித்தும் தற்போதைய நிலவரம் குறித்தும் ஆராயப்பட்ட இந்த மாநாட்டில் முப்படை அதிகாரிகளுக்குத் தேவையான அறிவுறுத்தல்களும் விடுக்கப்பட்டன.

போர் நிறுத்த உடன்படிக்கையைத் தொடர்ந்து கடைப்பிடிக்குமாறு படை அதிகாரிகளைஅவர் கேட்டுக்கொண்டார்.

## அனுசரணையி...

இதுவாகும். இந்நிலையில் நோர்வேகாரர் என்ன செய்ய முடியும்? அவர்கள் பொறுத்திருந்து பார்க்கத்தான் முடியும். சந்திரிகா குமாரதுங்க, பிரபாகரன், ரணில் விக்கிரமசிங்க ஆகியோரை நோர்வே இப்பேச்சுவார்த்தையில் உட்படுத்த வேண்டியுள்ளதென சூல் ஹெய்மைச் சந்தித்தபோது கூறினேன்.

சமாதான நடவடிக்கை முன்னெடுத்துச் செல்வது எமது விருப்பம். சனாதிபதியும், பிரதமரும் ஒரு உடன்பாட்டுக்கு வருவதே அடிப் படை தீர்வுக்கு வழிவகுக்கு மென நாங்கள் புத்திமதி கூறுகி றோம் என அவர் மேலும் கூறியுள்ளார்.

## மாவீரர்...

எச்சரித்ததால் அப்பகுதியில் ஏற்பட்ட படையினர் மற்றும் பொதுமக்களிடையேயான முறுகல் நிலையைத் தொடர்ந்து இப்பதற்ற நிலை தோன்றியுள்ளது.

இதனைத் தொடர்ந்து மாலை அங்கு சென்ற கண்காணிப்புக் குழுவினர் படையினருடன் இது சம்பந்தமான விசாரணைகளை நடத்தியதுடன் பொதுமக்கள் - தம் செயற்பாட்டை ஆயுத முனையில் தடுத்து நிறுத்தி யமை யுத்த நிறுத்த மீறல் எனவும், எமது உணர்வுகளை மழுங்கடிக்கும் செயற்பாடு எனவும் கண்காணிப்புக்குழுவிடம் சுட்டிக்காட்டியுள்ளனர். (33)

## சபாநாயகரின்..

பக்ஷ கருத்து தெரிவிக்கையில், சபாநாயகரின் இவ் அறிக்கை சம்பந்தமாக பதிலளிக்க எதிர்க் கட்சிகள் சந்தர்ப்பம் வழங்க வேண்டுமென கோரியுள்ளார். சபாநாயகரின் கருத்து அரசியலமைப்புக்கு முற்றிலும் முரணானது என கூறினார்.

எனவே, இது தொடர்பில் நாடாளுமன்ற விவாதம் ஒன்றிற்கு அவர் வேண்டுகோள் விடுத்தார்.

பொதுசன ஐக்கிய முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் மங்கள சமரவீர தமது கருத்தில், அரசியலமைப்பின் 70ஆவது சரத்தின்படி நாடாளுமன்ற அமர்வுகளை கலைபதற்கு மற்றும் கூட்டுவதற்கு சனாதிபதிக்கு முழுமை அதிகாரம் இருப்பதாக குறப்பிட்டார். நாடாளுமன்றத்தில் 130 உறுப்பினர்களின் கையொப்பமாக இருந்தாலும் அல்லது முழுமையான 225 உறுப்பினர்களின் கையொப்பமாக இருந்தாலும் கூட சனாதிபதிக்கு அவற்றை நிராகரித்து நாடாளுமன்ற அமர்வுகள் தொடர்பில் முடிவெடுக்க முடியும் எனவும் அவர் தெரிவித்தார்.

## பாராளுமன்றை...

அவர் சுட்டிக்காட்டிக்காட்டினார்.

கடந்த 3ஆம் திகதி நாடாளுமன்ற அமர்வு சனாதிபதியினால் எவ்வித காரணமுமின்றி திடீரென ஒத்திவைக்கப்பட்டது.

இலங்கை அரசியலமைப்பின் 10வது சரத்தின் அடிப்படையில் நாடாளுமன்றஅமர்வை சனாதிபதி ஒத்திவைக்க வேண்டுமானால் அதற்கு நாடாளுமன்றத்தின் இணக்கம் பெறப்படவேண்டும். அதுவும் நிறைவேற்று மற்றும் அரசியலமைப்பு அதிகாரங்களில் இரண்டு கட்சிகள் பங்கேற்கும் போது இந்த நடவடிக்கை அவசியமானதாகும். அவசரமாக நாடாளுமன்ற அமர்வை ஒத்திவைத்தமையால் நடைமுறை சமாதானத்திற்குத் தடை ஏற்பட்டுள்ளதுடன் நாடாளுமன்ற கௌரவத்திற்கும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

அதேவேளை அரசியலமைப்பின் 4வது சரத்தின்படி நாடாளுமன்றத்தின் அதிகாரங்களை நடைமுறைப் படுத்துவதற்கும் கூட்டத்தொடரை கூட்டுவதற்கும் உரிமை இருப் பதாகத்தான் கட்டளையா கத் தெரிவிப்பதை சபாநாயகர் ஜோசப் மைக்கல் பெரேரா குறிப்பிட்டார். பாராளுமன்ற நடவடிக்கைகளை உயர் நீதிமன்றம் முன்னர் தடுப்பதற்கு முயன்ற வேளை அப்போது சபாநாயகராக இருந்த அனுரா தெரிவித்த கருத்தையும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். அவர் தொடர்ந்து கருத்துக் கூறுகையில்;

பாராளுமன்ற நடவடிக்கைகளை ஒத்திவைப்பது நாட்டில் தலைவரது கடமைகளில் ஒன்று என ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள ஒன்று எனக் கூறி இருப்பினும், கடைப்பிடிக்கப்படும் வழிமுறைகளுக்கு அமையாது பாராளுமன்றத்தின் விருப்பத்திற்கு எதிராக எந்தவொரு நாட்டிலும் பாராளுமன்ற நடவடிக்கை ஒத்திவைக்கப்படவில்லையெனக் கூறியுள்ளார்.

அதிகாரங்கள் தவறான முறையில் பாவிக்கப்பட்டால் பாராளுமன்றத்தை மீண்டும் கூட்டுவதற்கான வேண்டுகோளை விடுக்கும் உரிமை பாராளுமன் றத்திற்கு உண்டு என அவர் மேலும் கூறியுள்ளார். (33)

## மாவீரர்நாளை...

ஒவ்வொரு மாவீரரின் தியாகமும் ஒவ்வெரு வரலாற்றை சுட்டி நிற்கின்றது. காலத்தால் அழியாத மாவீரர் தியாகம் உலகிற்கு புதிய அத்தியாயத்தைப் படைத்துள்ளது. தமிழ் இனத்திற்கு புது உத்வேகத்தைக் கொடுத்துள்ளது.

இந்தப் புனிதர்களை ஈன்று இந்த மண்ணின் விடுதலைக்காக அவர்களை அற்பணம் செய்த அன்புப் பெற்றோர்களை இந் நாளில் தமிழ் பேசும் மக்களாகிய நாம் நன்றி உணர்வுடன் அவர்களைப் போற்ற வேண்டிய கடமைப்பாடு உடையவர்களாக இருக்கிறோம்.

இன்று தென்னிலங்கையில் ஒப்பிட்டு வரும் அரசியல் மாற்றங்கள் இன்று நிலவும் சமாதான சூழ்நிலையை கேள்விக் குறியாக்கி உள்ளது. தென் பகுதியில் வாழும் சிங்கள இன மக்கள் தமிழ் மக்களின் உரிமையினை அபிலாசைகளை அரசியல் பேச்சு வார்த்தையூடாக வழங்கத் தயாரில்லை. தென் பகுதியில் வாழும் சிங்கள தலைமைகள் தமிழ் மக்கள் தமது உரிமைகளையும் அபிலாசைகளையும் அரசியல் பேச்சு வார்த்தையூடாக வழங்கத் தயாரில்லை என்ற நிலைப்பாட்டை அவர்களது செயற்பாடுகள் எமக்கும் சர்வதேசத்துக்கும் உணர்த்தி நிற்கின்றன.

இவ்வேளையில் தமிழ் பேசும் மக்களாகிய நாம் அனைவரும் உணர்ந்து கிளர்ந்தெழுந்து எழுச்சிக்கோலம் கொண்டு ஒற்றுமையாக எமது தேசிய தலைமையின் கரங்களை பலப்படுத்துவதோடு அரசியல் பேச்சுவார்த்தைக் கூடாக எந்தவொரு விட்டுக் கொடுப்பும் இல்லாத தீர்வை தமிழ் மக்களாகிய நாங்கள் பெற சர்வதேசத்துக்கும் மீண்டும் அழுத்தம் கொடுக்க வேண்டிய காலகட்டமாகும்.

அற்பணம் செய்த உறவுகள் உறங்கிக் கொண்டிருக்கும் துயிலும் இல்லங்களை நோக்கி அன்றைய தினம் நடைபோடுமாறு அனைத்து தமிழ் மக்களையும் யாழ் மாவட்ட மாவீரர் ஏற்பாட்டுக் குழு வேண்டுகோள் விடுக்கின்றது. இந் நாளில் குடாநாட்டில் இருக்கும் மக்கள் அனைவரும் தங்கள் வீடுகளில் சிவப்பு, மஞ்சல், கொடிகளை கட்டுவதுடன் வீதிகளை அலங்கரித்து மாவீரர் நினைவு பந்தல்களை அமைத்து எழுச்சிப்பாடல்களை ஒலிக்கவிட்டும் மாவீரர் நாளினை உணர்வெழுச்சியுடன் அனுஷ்டிக்குமாறு வேண்டுகின்றோம். (27)

## 2004ஆம்...

இரு தொகைகளில் கூடுதலான தொகைகளை சம்பள அதிகரிப்பாக பெறுவார்கள். இது பொலிஸ் திணைககள ஊழியர்கள் ஆயுதப்படையினர் கூட்டுத்தாபன ஊழியர்களுக்கும் பொருந்தும். 200ஆம் ஆண்டு வழங்கப்பட்ட 1200 ரூபா இடைக்காலக் கொடுப்பனவு 2001ஆம் ஆண்டு வழங்கப்பட்ட 1000 ரூபா அல்லது சம்பளத் தொகையின் பத்து சதவீத இடைக்காலக் கொடுப்பனவு என்பன 2006ஆம் ஆண்டு ஒவ்வொரு சம்பள அளவினதும் அடிப்படைச் சம்பளத்தில் சேர்க்கப்படும். ஓய்வூதியம் பெறுவோர் எதிர்வரும் சனவரி 1ஆம் திகதி தொடக்கம் பத்து சதவீத அதிகரித்த கொடுப்பனவை பெறுவார்கள்.

அரசாங்க ஊழியர்களுக்கான சுய விருப்ப ஓய்வூதியத் திட்டம் ஒன்றும் அறிமுகப்படுத்தப்படவுள்ளது. இதற்கு அமைய வேலையில் இருந்து விலகும் ஊழியர் ஒருவர் 2001, 2002 ஆம் ஆண்டுகளின் முழுச் சம்பளக் கொடுப்பனவுகளுடன் 55 வயதை அடையும் வரை அரச ஊழியர் சம்பளம் பெறுவர். அதன் பின்னர் பொருந்தத்தக்க ஓய்வூதியம் வழங்கப்படும். ஊழியர்கள் ஓய்வூதியம் பெறும் வேளையில் இடர் உதவிக் கடனை 24000 ரூபாவைக் கொண்ட தொகையும் நிவாரணமாக வழங்கப்படும். 2004ஆம் ஆண்டளவில் ஒரு இலட்சம் அரசாங்க ஊழியர்களையும், 2006ஆம் ஆண்டாளவில் இரண்டு இலட்சம் ஊழியர்களையும் குறைந்த மத்திய தரங்களில் இருந்து குறைப்பதே இதன் நோக்கம் என நிதி அமைச்சர் தெரிந்துள்ளார்.

அடுத்த ஆண்டு தொடக்கம் உரத்துக்காக அரசாங்கம் ஒதுக்கும் நிவாரணம் 200 கோடியில் இருந்து 300 கோடியாக அதிகரிக்கப்படவுள்ளது. இதற்கமைய யூரியாவுக்கான உர மானியம் ஒரு பொதிக்கு 300 ரூபாவில் இருந்து 450 ரூபா வரை உயரும் எனவும் அவர் தெரிவித்தார்.

இந்த ஆண்டின் முதல் ஆறுமாதத்தில் 5.6 சதவீத பொருளாதார வளர்ச்சி அடையப்பெற்றுள்ளதாகத் தெரிவித்தஅமைச்சர் சொக்ஸி, வளர்ந்து வரும் பொருளாதாரத்தைக் கொண்டுள்ள நாட்டில் இது வரவேற்கத்தக்கது.

வங்கிகள் நிதிச்சேவைகள், சுற்றுலா, தொலைத் தொடர்பாடல் ஆகியன இவற்றில் அடங்குகின்றன.

கைத்தொழில் துறைசார் வளர்ச்சி 5.8 சதவீதமாகப் பதிவு செய்யப்பட்டுள்ளது. விவசாயத்துறையைக் கருதும் போது இந்த ஆண்டு இரண்டு போகங்களிலும் அமோக விளைச்சல் எட்டப்பட்டுள்ளது.

2001ஆம் ஆண்டு 10.8 சதவீதமாகக் காணப்பட்ட வரவு செலவுத்திட்டப் பற்றாக்குறை கடந்த ஆண்டு 8.9 சதவீதமாகக் குறைக்கப்பட்டுள்ளது.

இந்த ஆண்டு அதனை மொத்த உள்ளூர் உற்பத்தியில் 7.8 சதவீத பெறுமதியாக மட்டுப்படுத்த முடியும் என்று நிதி அமைச்சர் தெரிவித்தார்.

2001ஆம் ஆண்டு மொத்த உள்ளூர் உற்பத்தியில் 103 சதவீதமாக இருந்த அரசாங்கக் கடன் தொகையை இந்த ஆண்டு 100 சதவீதமாகக் குறைக்கப்பட்டுள்ளது. ஏற்றுமதி வருவாய் கடந்த ஆண்டைவிட 10 சதவீதத்தால் அதிகரித்துள்ளது. வெளிநாட்டுச் சொத்துக்களின் பெறுமதி அண்ணளவாக 290 கோடி ரூபா வரை உயர்ந்துள்ளது. இது கடந்த ஆறு ஆண்டுகளில் எட்டப்பட்ட மிக உயர்ந்த மட்டமாகக் காணப்படுகின்றது.

2002ஆம் ஆண்டளவில் வெளிநாட்டு நேரடி முதலீடுகள் 23 கோடி ரூபாவரை அதிகரித்துள்ளது. அதிகரித்த நேரடி முதலீடுகள் கைத்தொழில் ரீதியான உற்பத்திகளை அதிகரிக்க வழிவகுப்பதுடன் இதனூடாக கூடுதலான வேலைவாய்ப்புக்களையும் உருவாக்கும் என அமைச்சர் தெரிவித்தார்.

சர்வதேச நாணய சந்தையில் இலங்கையின் ரூபா உயர்ந்துள்ளது. 2001ஆம் ஆண்டில் 14.2 சதவீதமாக இருந்த பணவீக்கம் கடந்த ஒக்டோபர் மாதம் அளவில் 7.2 சதவீதமாகக் குறைந்துள்ளது. அதன் பெறுபேறாக முதலீட்டை ஊக்குவிக்கக் கூடிய குறைந்த வட்டி வீதங்கள் உருவாகியுள்ளன.

பங்குச் சந்தைகளின் வளர்ச்சி, வட்டிவீதங்களில் வீழ்ச்சி திறைசேரி உண்டியல் களை மக்கள் கொள்வனவு செய்ய முடிந்திருப்பது போன்ற பல அனுகூலங்கள் இடம்பெற்றுள்ளன.

பொருளாதார வளர்ச்சிக்கு வழிவகுக்கக் கூடியவாறு உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்காக அரசாங்கம் மூன்று ஆண்டு அபிவிருத்தித் திட்டத்தையும் முன்மொழிந்துள்ளது.

இதன் பிரகாரம் மொத்தசனத் தொகையில் 65 சதவீதமானோருக்கு மாத்திரமே மட்டுப்படுத்தப்பட்டிருக்கும். மின்சார வசதிகளை இன்னும் மூன்று ஆண்டுகளில் 80 சதவீதமானோர் பெற்றுக் கொள்வதற்கான இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

பிரதான நகரத்தை இணைக்கும் அதிவேக நெடுஞ்சாலைகள் நிர்மாணிக்கப்படுவதுடன் 'B'மற்றும் 'C' தரத்திலான வீதிகளையும் உள்ளூராட்சி அமைப்புகளின் கீழ் இயங்கும் வீதிகளையும் அபிவிருத்தி செய்வதற்கும் திட்டமிடப்பட்டுள்ளது. கிராமிய நகர்ப் புறங்களுக்கான குடிநீர் அடிப்படை சுகாதார வசதிகளும் மேம்படுத்தப்படவுள்ளது. கைத்தொழில் துறையில் ஈடுபட்டோரை ஊக்குவிப்பது விவசாயத்துறையில் உற்பத்திகளை அதிகரிப்பது பெருந்தோட்டத் தொழில்சார் தொழிலாளர்களின் நலன்களை மேம்படுத்துவது என்பன வரவு செலவுத் திட்டத்தில் கூறப்பட்டுள்ள ஏனைய யோசனைகளாகும்.

வடக்கு-கிழக்கில் புனர்வாழ்வு புனரமைப்புப் பணிகளுக்காக அடுத்த ஆண்டு 800 கோடி ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

இந்த மாகாணத்தின் மூன்று பிரதான திட்டங்களினூடாக இந்தப் பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளன. இவற்றுள் வடபகுதிக்கான மின் விநியோக வலையமைப்புக்களை மேம்படுத்துதல் பாடசாலைகளின் புனரமைப்பு கரையோர சமூக அபிவிருத்தித் திட்டம், மீள் குடியேற்றத் திட்டம் என்பன முக்கியத்துவம் பெறுகின்றன.

vat பெறுமதி சேர்த்த வரியில் காணப்பட்ட 20 மற்றும் 10வீத வரி ஒரு முகப்படுத்தப்பட்டு 15 வீத வரி இனிமேல் நடைமுறைப்படுத்தப்படும்.

அத்தியாவசியப் பொருட்களான அரிசி, மா, குழந்தைகளுக்கான பால்மா, சீனி, உட்பட்ப் பல பொருட்களுக்கு vat வரியில் இருந்து விலகளிக்கப்பட்டுள்ளது. இதன் காரணமாக அத்தியாவசியப்பொருட்களின் விலைகள் குறையும் வாய்ப்புக்கள் உருவாகும்.

வரிச்சலுகை ஆண்டு ஒன்றுக்கு 2 லட்சத்து 40ஆயிரத்தில் 23 இலட்சமாக உயர்த்தப்பட்டுள்ளது.

நாட்டில் 32 ஆயிரம் நிறுவனங்கள் மற்றும் வியாபாரிகள் பதிவு செய்யப்பட்டுள்ளனர். ஆனால் இவற்றில் சுமார் 9ஆயிரம் வியாபாரிகளே ஐந்து வீத வருமானத்தை வெளிப்படுத்துகின்றனர்.

அதிலும் 2271நிறுவனங்களே உரிய முறையில் வரியைச் செலுத்துகின்றன.

இந்நிலையில் 10மில்லியன் ரூபா பெறுமதியான சொத்துக்களைக் கொண்டிருப்போரும், 20 மில்லியன் ரூபா விற்பனையை கொண்டிருப்போருக்கும் vat வரியுடன் சேர்த்து (Economic service chorge) ஒரு வீத பொருளாதார சேவைக்கப்பம் அறவிடப்படும்.

செல்லிடத் தொலைபேசி கொள்வனவுகளில் 300 ரூபா வரி அறவிடப்படும்.

முதலீட்டுளர்களுக்கு 49 வருட வதிவிடவிசா வழங்குதல். சுங்கத்தீர்வை 10 வீதத்தால் குறைப்பு

பாதுகாப்பு அமைச்சுக்கான ஒதுக்கீடு 5208 கோடியே 22இலட்சம் ரூபாவாகும்.

இது கடந்த வருடத்தை காட்டிலும் 1500 கோடி ரூபாய் அதிகமானது 2004ஆம் ஆண்டுக்கான அரசாங்கத்தின் மொத்தச் செலவீனம் 46ஆயிரத்து 900கோடி எதிர்பார்க்கப்படும் வருமானம் 33ஆயிரத்து 200 கோடி துண்டுவிழும் முழுத் தொகை 13ஆயிரத்து 700கோடி இது மொத்தத்தேசிய உற்பத்தியில் 6.8வீதமாகும்.


## இரங்கற் செய்தி

### திருமதி. கெங்காதரன்

வன்னிப் பகுதியில் நேர காலம் பாராது மகத்தான மருத்துவ சேவையாற்றிக் கொண்டிருக்கும் Dr. கெங்காதரன் ஐயா அவர்களின் அன்புத் துணைவியார் யாழ்ப்பாணத்தில் 19-11-2003 அன்றிரவு 8.30 மணிக்கு காலமான செய்தி கேட்டு மிகவும் கவலையடைந்துள்ளோம். இதனால் ஆழ்ந்த துயரில் இருக்கும் அன்னாரின் குடும்பத்திற்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

நடுவப் பணியகம்,
தமிழீழ சுகாதார . சேவைகள்,
தமிழீழம். (சி-8719)


இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2003ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 20ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.